Registered as a Newspaper

பக்கங்கள் 06

சுவைமிக்க உஸ்வத்தை கண்டோஸ் தயாரிப்புகளுக்கு விஜயம் செய்யுங்கள்
பெட்டா எசன்ஸ் சப்பிளேயர்ஸ்
333, நாவலர் ரோட், யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-25

சிறு கைத்தொழில்களுக்கு ... சரலப்பொருள்களை மலிவாகப் பெற்றுகொள்ள யாழ் நகரில் முதன்மை வகிக்கும் ஸ்தாபனம்
பெட்டா எசன்ஸ் சப்பிளேயர்ஸ்
333, நாவலர் ரோட், யாழ்ப்பாணம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆடி மீ 24 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 துல்ஹஜ் பிறை 13 (09 – 08 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 218

★ நிராயுதபாணிகள் கொலை ★ முகாம்களில் சித்திரவதை
★ தமிழ் மண்ணில் சிங்களக் குடியேற்றம்
★ யுத்த நிறுத்தம் மீறல் ★ ஒப்பந்தத்துக்குப் 'பேப்பே''!
★ இவற்றை எதிர்த்து தமிழர் உணர்வைத் தெரிவிக்க

# வடக்கு, கிழக்கில் இன்று முழு அளவில் ஹர்த்தால்

## நூற்றுக்கணக்கான சமூக நல இயக்கங்கள் சேர்ந்து ஏற்பாடு

### போராளிகள் இயக்கங்கள் ஒத்துழைப்பு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 9

வடக்கிலும் கிழக்கிலும் நிராயுதபாணிகளான போராளிகளும் அப்பாவி மக்களும் கொலை செய்யப்படுதல்–

கிழக்கில் உள்ள பல முகாம்களில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் கொடும் சித்திரவதைக்கு ஆளாக்கப்படுதல்–

தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னரும் தொடர்தல்–

யுத்த நிறுத்தத்தை ஸ்ரீ லங்கா அரச படைகள் மீறி நடத்தல்-

ஜே. ஆர்-ராஜீவ் ஒப்பந்தத்தை சிறிதேனும் மதிக்காது ஸ்ரீலங்கா அரச படைகள் அடாவடித்தனம் புரிதல்-

இவற்றை ஆட்சேபித்து தமிழ் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் முகமாக இன்று வடக்கு, கிழக்கின் சகல பகுதிகளிலும் முழு அளவிலான ஹர்த்தால் நடைபெறும்.

இந்த ஹர்த்தாலை ஈழவர் முன்னணியுடன் சேர்ந்து நூற்றுக்கணக்கான சமூக நல இயக்கங்கள் ஏற்பாடு செய்திருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், ஈரோஸ் இயக்கம் ஆகிய போராளிகள் இயக்கங்களும் ஹர்த்தாலுக்கு ஒத்துழைப்பு அளிப்பதாக அறிவித்துள்ளன.

ஹர்த்தாலையொட்டி கடைகள் யாவும் பூட்டப்பட்டிருக்கும். வாகனப் போக்குவரத்து முற்றாக நிறுத்தப்படும். மக்கள் தத்தமது வீடுகளில் இருந்து தமது ஆட்சேபத்தை தெரிவிப்பர்.

ஹர்த்தாலை ஆதரித்தும், ஒத்துழைப்பு நல்கியும், எதிர்ப்பை இந்திய அமைதிப்படையினர், அரசாங்கம் ஆகியவற்றுக்கு மகஜர் மூலம் தெரிவித்தும் பல சமூக நல இயக்கங்கள் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

இந்திய—இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின் போர்நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்ட பின்னரும் ஸ்ரீலங்கா படைகள், ஒப்பந்தத்தை மீறி தமிழ் மக்கள் மீது நடத்திவரும் அடாவடித்தனங்களை மேற்படி அமைப்புக்கள் தமது அறிக்கைகளில் வன்மையாகக் கண்டித்தும் உள்ளன.

ஹர்த்தாலை ஆதரித்தும், ஸ்ரீலங்காப் படைகளின் அடாவடித்தனங்களைக் கண்டித்தும் அறிக்கை வெளியிட்டுள்ள அமைப்புக்கள் சில வருமாறு:-

வட பிரதேச தொழிற்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அறிவித்தல்

### ஷப்ரு யுனிக்கோ பிஞன்ஸ் லிமிட்.

எமது நிதி நிறுவனம் இம் மாதம் பத்தாம் திகதி (10-8-1987) திங்கட்கிழமை முதல் பழைய இடத்துக்கு (207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்) இடம் மாற்றம் செய்யப்படுகின்றது.

இதனை எமது வாடிக்கையாளர், நலன்விரும்புவோர் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

—நிர்வாகத்தினர்

## 8 நாட்களில் 15 பேர் கால் இழப்பு

யாழ்ப்பாணம், ஆக. 9

கடந்த முதலாம் திகதியில் இருந்து நேற்று வரை பொறி வெடியில் சிக்கி 15 பேர் கால்களை இழந்துள்ளனர்.

நேற்றும் வீமன்காமம் பகுதியில் வீடு பார்க்கச் சென்ற இருவர் பொறி வெடியில் சிக்கி தமது கால்களை இழந்தனர்.

[இ-10]

## கிறீஸும் வரவேற்பு

கொழும்பு, ஆக. 9

இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை கிறீஸ் அரசாங்கமும் வரவேற்றுள்ளது.

இது சம்பந்தமாக கிறீஸ் அரசு அறிக்கை ஒன்றை விடுத்தது

(இ-எ)

## ஆதரவு தெரிவித்து புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக 9

ஈழவர் முன்னணி, ஈழப்புரட்சி அமைப்பு ஆகியவற்றினால் இன்று நடத்தப்படும் ஹர்த்தாலுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது

அறிக்கையில மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட 94 பேர் அக்கரைப்பற்று, தாண்டியடி, சாகாமம், காஞ்சிரக்குடா, திருக்கோவில், கோமாரிஆகிய முகாம்களில் தினசரி சித்திரவதைக்குள்ளாகிய வண்ணமுள்ளனர்.

இலங்கை—இந்திய ஒப்பந்தம் நிறைவேறியதில் இருந்து இவர்களுக்கு உணவோ, குடிதண்ணீரோ வழங்காது ஸ்ரீலங்கா இராணுவம் பெரும் சித்திரவதைக்குள்ளாக்குகிறது.

கடந்தவியாழக்கிழமை திருமலை 10ஆம் வட்டாரத்தில் ஸ்ரீலங்கா ஊர்காவல்படையால் நடத்தப்பட்ட இனவெறித் தாக்குதலில் 2 அப்பாவிப்பொதுமக்கள்கொலை செய்யப்பட்டனர்.

மேலும் 6 அப்பாவிகள் படுகாயமடைந்தனர். பின்பு அங்குநின்ற தமிழ் இளைஞர்களை சிங்களப் பொலீஸார் தாக்கினர்.

மட்டக்களப்பு பாணம என்ற கிராமத்தில் தொடர்ந்து இனவெறியாட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

வன்னிப் பிராந்தியத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் சோதனை இல்லை!

யாழ்ப்பாணம், ஆக. 9

ஆனையிறவு முகாமை கடக்கும் வாகனங்கள் இப்போது சோதனை செய்யப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுபடுகிறது.

ஆனையிறவு முகாமுக்கு இந்திய இராணுவத்தினர் வந்த பின்னரே சோதனை நிறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

(இ-ஒ-10)

## பாலகுமார் கூறுகிறார்

# போராளிக் குழுக்களுடன கலந்தாலோசித்த பின்பே

## இடைக்கால நிர்வாகம் வர முடியும்

சென்னை, ஆக. 8

போராளிக் குழுக்களுடன் கலந்தாலோசித்த பின்னரே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இப்படி ஈரோஸ் இயக்கப் பிரமுகர் திரு. வி. பாலகுமார் சென்னையில் தெரிவித்தார்.

போராளி அமைப்புக்களுடன் கலந்தாலோசிக்காமல் அமைக்கப்படும் இடைக்கால நிர்வாகத்தை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் திரு. பாலகுமார் சொன்னார்.

இடைக்கால நிர்வாகத்தைக் கவனிக்கும் குழுவில் மூன்று சிங்கள அதிகாரிகள் இலங்கை அரசினால் நியமிக்கப்பட இருப்பதாக வெளியான கொழும்புச் செய்திகள் பற்றி கருத்து வெளியிடுகையிலேயே திரு. பாலகுமார் முன்கண்ட தகவல்களை வெளியிட்டார். கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் கருத்து வெளியிடு



பாலகுமார்

(6ஆம் பக்கம் பார்க்க)

ஒப்பந்த விவரம் 2ஆம் பக்கத்தில்
இலங்கை—இந்திய ஒப்பந்தம் முழு விவரமும் 2ஆம்பக்கத்தில்

# தற்போது இருந்துவரும் பிரச்சினை சிங்களப் பயங்கரவாதிகள் பற்றியதே

## என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஆக. 9

தற்பொழுது எனக்குள்ள பிரச்சினை சிங்களப் பயங்கரவாதிகள் பற்றியதே.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா கொழும்பில் வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் சொன்னதாவது;

நாடாளுமன்றம் இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை ஏற்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

செப்டம்பர் இறுதிப் பகுதியில் அல்லது அக்டோபர் முதல் வாரத்தில் ஒப்பந்தத்தை நாடாளுமன்றம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகின்றேன்.

இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியா மிகப் பெரிய சக்தி படைத்த நாடு.

இதனை நடைமுறையில் நாம் ஒப்புக்கொண்டு தான் ஆகவேண்டும்.

இந்த அம்சத்தைக் கருத்திற்கொண்டு தான் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை அமைய வேண்டும்.

இப்போது எனக்கு உள்ள பிரச்சினை சிங்களப் பயங்கரவாதிகள் பற்றியதே.

இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதில் எனது அரசு உறுதியுடன் செயல்படுகின்றது.

இப்படி அவர் கூறினார்.

(இ-எ)

## சுபநேரம்

9-8-1987

ஞாயிற்றுக்கிழமை

சுப நேரம்:-
09.04 முதல் 10 34 வரை

ராகுகாலம்:-
04.34 முதல் 06.04 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

பூரணை விரதம்

## முச்சந்தி முரளி



ஆக்களைக் கொன்றதும் காணாது எண்டு கால் பறிக்கிற வேலையுமெல்லே செய்துவிட்டுப் போயிருக்கினம் ஸ்ரீ லங்கா இராமண்ணைமார்!

## பூநகரி சங்குப்பிட்டி பாதைச்சேவை

யாழ்ப்பாணம், ஆக. 9

மடு தேவாலய யாத்திரிகர்களின் நலன்கருதி எதிர்வரும் 12ஆம் திகதி முதல் பூநகரி – சங்குப்பிட்டி பாதைச் சேவை நடைபெறவுள்ளது

இதற்கான ஏற்பாடுகளை பூநகரி பெருந்தெருக்கள் திணைக்கள பொறியியலாளர் மேற்கொண்டுள்ளார்.

பாதையில் ஏற்பட்டுள்ள திருத்தவேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

(இ-10)

# பூஸாவிலிருந்து 300பேர்விடுதலை

## இந்திய யுத்தக் கப்பல் மூலம் கொண்டுவரப்படுகின்றனர்

கொழும்பு, ஆக. 9

பூஸா முகாமில் இருந்து முதல் தொகுதியாக முந்நூறு தமிழ் அரசியல் கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் பஸ்களில் ஏற்றப்பட்டு காலித்துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டனர்.

காலித்துறைமுகத்தில் இந்தியக் கடற்படைக் கப்பல் ஒன்றில் இவர்கள் ஏற்றப்பட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்டவுடன் தமிழ் அரசியல் கைதிகள் ஆளை ஆள் கட்டிப்பிடித்து மகிழ்ச்சி தெரிவித்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் ஆயுதங்களை பொறுப்பேற்க இந்திய படைகள் தயார்

கொழும்பு, ஆக. 9

போராளிகள் ஒப்படைக்கும் ஆயுதங்களைப் பொறுப்பேற்பதற்காக கிழக்கு மாகாணத்தில் இந்திய அமைதிப் படையினர் தயார் நிலையில் இருக்கின்றனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

தலைவர்களுடன் ஆலோசனை நடத்திய பின்னரே

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஒப்பந்த அமுலை கண்காணிக்கக் குழு

## ராஜீவ் நியமித்தார்

புதுடில்லி, ஆக 9

இலங்கை -இந்திய ஒப்பந்தம் சரிவர அமுல் நடத்தப் படுகின்றதா என்பதைக் கண்காணிக்க குழு ஒன்றை பிரதமர் காந்தி நியமித்திருக்கின்றார்.

இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் இக்குழு இயங்கி வருகிறது.

குழுவின் தலைவராக இணை அமைச்சர் நட்வர்சிங் இருக்கின்றார்.

ஏனைய இரண்டு உறுப்பினர்கள் விவரம் வருமாறு:-

1. திரு பி எஸ். மேனன், வெளியுறவுச்செயலாளர்,
2. திரு குல்தீப் சகாதேவ், (பங்களாதேஷ், இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளுக்குப் பொறுப்பாக வெளியுறவு அமைச்சில் இணைச் செயலாளராக இவர் பணிபுரிகின்றார்)

ஒப்பந்தத்தை அமுல் நடத்துவது பற்றி தினமும் இந்தக் குழு கூடி ஆராய்ந்து வருகின்றது.

இதனிடையில் ஒப்பந்த அமுலைக் கவனிக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அறிவித்தல்

### காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை

கீழ்க் குறிப்பிடப்படும் ஊழியர்கள் திங்கள் (10-08-87 காலை 8-00 மணிக்கு நேரக்கணிப்பகத்தில் கடமைக்காகப் பிரசன்னமாக இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

1. நிர்வாக உத்தியோகத்தர்கள் (Executives)
2. பகுதித் தலைவர்கள் (Suprintendent & Burner)
3. குடிசார் முகாரிகள் (Civil Foreman)
4. போசனசாலை முகாமையாளர் (Canteen Manager)
5. ஆளணிப்பகுதி எழுதுவினைஞர்கள் (Pers nal Clerks)
6- நேரக்கணிப்பாளர்கள் (Time Keepers)
7, தச்சுத் தொழிலாளர்
8: சுத்திகரிப்பு தொழிலாளர் (நிரந்தர/ஒப்பந்த)

தொழிற்சாலை முகாமையாளர்
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை

இளைய தலைமுறையின் ... இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★
★சின்னஞ் சிறு★
★ விளம்பரம் ★
★★★★★★★★★

## சேவை

மூன்று மொழிகளில் றபர் சீல்கள், பிளாஸ்டிக் நேம் போட், நம்பர் பிளேட், விளம்பர போட் செய்துகொள்ள நாடுங்கள்: வீமா றபர் ஸ்ராம்ஸ், 104, ஆஸ்பத்திரி சந்தி, யாழ் நகர், ஏஜென்சிகள் வேண்டப்படுகின்றனர். (1384)

ரீ. வி. வீடியோ டெக், ஒடியோ டெக், ரேடியோ, மின்சார எலக்ரோனிக் பொருள்கள் வாங்கவும் விற்கவும் நம்பிக்கையான ஸ்தாபனம் செலி வொயிஸ் என்ஜினியேர்ஸ், 184, A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (1393)

தரமான போட்டோஸ்ரட் (Photostat) பிரதிகளுக்கு கிவீ போட்டோ 380, ஆஸ்பத்திரி வீதி, (ஸ்ரேசன் சந்தி) யாழ்ப்பாணம். (1361)

சகல புடைவைத்தினுசுகளுக்கும், சகல அளவிலான - டிசைன்களிலான கவுன்களுக்கும், றெடிமேட் ஆடைகளுக்கும், அன்பளிப்பு அலங்காரப் பொருட்களுக்கும் பாதணிகளுக்கும் பிறந்த தின, திருமண மற்றும் வைபவங்களுக்குமான வாழ்த்துமடல்களுக்கும், நீங்கள் கொடுக்கும்துணிகளை அன்றே தைத்துப் பெற்றிடவும் - மியாமி சாமென்ஸ், 40, ஈச்சமோட்டை வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (1385)

## விற்பனைக்கு

நாலடியார், பரிபாடல் புறநானூறு, சிலப்பதிகாரம், நளவெண்பா, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, சீறுப்புராணம், திருக்குற்றாலக்குறவஞ்சி; ஆகிய புதிய நூல்கள் விற்பனையாகின்றன. கிடைக்குமிடம்:- பூபாலசிங்கம் புத்தகசாலை; நல்லூர் - யாழ்ப்பாணம்

## தேவை

இறைச்சிக்குக் கோழி தேவை. இனங்களுக்கு ஏற்ற வகையில் கிலோ முப்பது ரூபாவுக்கு மேற்பட்ட விலையில் பெற்றுக் கொள்ளப்படும். தொடர்பு கொள்ளும் முகவரி: ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (1386)

## கல்வி

மாணவர் விடுதலை நாட்களில் கணித பாடத்தை தாமாகவே மீட்க உதவும் நூல்கள் மயூரதி வெளியீடுகளாகும். ஆண்டு 8, ஆண்டு 10, ஆகியவற்றிற்கு கணிதம் பல்தேர்வு வினாக்கள் விற்பனையாகின்றன: பூபாலசிங்கம் புத்தகசாலை. (1455)

சமூகக்கல்வி 1987 O/L பரீட்சைக்கான துரித மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன 20, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் 5 வது புதிய பிரிவு ஆரம்பம் 12ஆம் திகதி பிற்பகல் 4-30 மணி. ஆசிரியர் யோசெவ்ஸ். (1388)

Sun Star Engineering Centre, Radio, T. V, Typing, (இரு பாலாரும்) Welding, Wiring, Re-winding ஆரம்பம்:- 05-09-87 Theory:- S.C. Emmanuel B. Sc. (Cey). Practical:- K. Sritharan இரு சான்றிதழ்கள், சாப்பாட்டுடன் தங்குமிட வசதி உண்டு. தொடர்பு Director M. Ghanhash. Jegajothy Engineering Works, 41, Bazaar Lane, Jaffna. (1460)


## நூல்வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம். ஆக. 9 அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஆதரவில் திரு. இளையதம்பி சுப்பிரமணியத்தின் ''வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்'' என்னும் நூல் வெளியீட்டு விழா நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்து மணியளவில் நடைபெறுகிறது.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி கோபாலகிருஷ்ணசர்மா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் அகில இலங்கைத் திருமுறை மன்றத் தலைவர் திரு. க. சொக்கலிங்கம் வரவேற்புரைநிகழ்த்துவார்.

(இ-161)

## ஹார்ட்லி மாணவர்களுக்கு வேண்டுகோள்

வடமராட்சி, ஆக. 9 ஜீ.சி.ஈ. (சாதாரணம்) இரண்டாம் வருடம் பரீட்சை எடுக்கும் ஹார்ட்லிக் கல்லூரி மாணவரை அதிபர் அழைக்கின்றார்.

மேற்படி பரீட்சை எடுக்கும் மாணவர்களை நாளை 10ஆம் திகதி காலை 9 மணியளவில் ஹார்ட்லிக் கல்லூரியின் தற்காலிக இடமான புற்றளை மகாவித்தியாலயத்தில் ஒன்றுகூடுமாறு கல்லூரி அதிபர் திரு. எஸ்.பாலசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரஸ்தாப பரீட்சைக்குத் தேவையான தஸ்தாவேஜுக்களையும் கொண்டுவருமாறு அவர் கேட்டுள்ளார்.

(இ-160)

## ஒப்பந்தம் --

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

போராட வந்தார்கள். இனி 'படிக்கவிட்டால் அவர்கள் தொடர்ந்து படிப்பார்கள். அவர்கள் படிக்க பாடசாலைகளும் இங்கு இல்லை. அரசு எல்லாவற்றையும் இடித்து விட்டது. அவற்றைக் கட்டித்தான் பின்பு படிக்கவேண்டும்.

கேள்வி:- ஸ்ரீலங்கா அரசு தமிழ்ப்பகுதிகளில் புனருத்தாரணம் செய்ய வந்தால் ஒத்துழைப்பீர்களா?

பிரபா:- புனருத்தாரணம் செய்ய என்று யார்வந்தாலும் ஒத்துழைப்போம்.

கேள்வி:- நீங்கள் உங்கள மக்களுக்கு விடும் செய்தி என்ன?

பிரபா:- ஒன்றும் இல்லை, இன்னமும் ஒரு முடிவு ஏற்படவில்லை. இலங்கைக்கும்- இந்தியாவுக்கும் இடையிலேயே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதனாலேயே இந்தியாவிடம் ஆயுதங்களை ஒப்படைக்கின்றோம்.

கேள்வி:- ஒப்பந்தம் ஏற்பட்டால் சிங்கள பேக்கரிக்காரர்களும் யாழ்ப்பாணம் வருவார்கள் என்று ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன சொல்லி உள்ளார். நீங்கள் அவர்களை வர அனுமதிப்பீர்களா?

பிரபா:- நட்போடு வரும் எவரையும் நாம் அங்கீகரிப்போம். (இ-7)

## அறிவித்தல்

ராஜன் புத்தகசாலை மீண்டும் தனது பழைய இடத்துக்கு இடம் மாறி விட்டது என்பதை வாடிக்கையாளர் அனைவருக்கும் தெரியப்படுத்துகிறோம். ராஜன் புத்தகசாலை, 12, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்,. தற்காலிக கிளை நிலையம்: விக்ரோறியா றேட், ஆஸ்பத்திரி பின்பக்கம், யாழ்ப்பாணம். (1457)

# இலங்கை - இந்திய ஒப்பந்தம்

## (முழு விவரமும் ஒரே பார்வையில்)

இலங்கையில் சமாதானமும் சகஜ நிலைமையும் திரும்ப இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் கொழும்பில் செய்து கொண்ட ஒப்பந்தம், இணைப்பு, பரிமாறப்பட்ட கடிதங்கள் என்பனவற்றின் விவரம் முழுமையாக இங்கு பிரசுரமாகின்றன.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான பாரம்பரிய நட்புறவைப் பலப்படுத்துவது, அதிகரிப்பது, வளர்ப்பது ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தும்—

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் அவசியத்தையும் இலங்கையில் வாழும் சகல இன மக்களின் பாதுகாப்பு, நலன், செழிப்பு ஆகியவற்றையும் கருத்தில் கொண்டும்—

இத்திகதி (29-7-1987) இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொள்கின்றோம்.

1. இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு, இறைமை, ஐக்கியத்தைப் பாதுகாக்க விரும்புவது—

2. சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் ஆகிய இன மக்கள் வாழும் பல்லின, பல மொழி பேசும் நாடாக இலங்கையை ஏற்றுக்கொள்வது—

3. ஒவ்வொரு இனப் பிரிவும் தனித்துவமான கலாசார மொழியைக் கொண்டுள்ளது; அவற்றைக் கவனமாக வளர்க்க வேண்டும் என்பதை அங்கீகரிப்பது—

4. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்கள் சரித்திர காலந் தொட்டு வாழ்ந்து வருகின்றனர்; அவர்கள் இது காலவரை ஏனைய இனப் பிரிவுகளுடன் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை அங்கீகரிப்பது—

5. இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாட்டை பலப்படுத்துவதையும், இலங்கை பலஇன, பலமொழி, பலசமய மக்கள் வாழும் நாடு என்பதைப் பாதுகாப்பதையும், இலங்கை மக்கள் பாதுகாப்பு, சௌஜன்யம், சமத்துவம் ஆகியவற்றுடன் தங்கள் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்து வாழ வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு—

பின்வருமாறு தீர்மானிக்கின்றோம். அவையாவன:

6. மாகாணங்கள் ஒரு நிர்வாக அமைப்பாக உருவாவதை இலங்கை அரசு முன்மொழியும் அதே நேரத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தமட்டில் பிரிந்து செல்ல சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று கீழ்க்கூறப்பட்டபடி ஏற்றுக்கொள்கிறது.

1. இடைக்காலம் என்று கருதப்படும் இக்காலத்தில் (அதாவது 2-8 பந்தியில் கூறப்பட்ட மாகாண சபைத் தேர்தல் நடந்தகாலத்தில் இருந்து 2-3 பந்தியில் கூறப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறும் திகதி வரை) வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒரு நிர்வாக அமைப்பாக இருக்கும். அதற்குத் தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை இருக்கும். அந்த அமைப்புக்கு ஒரு கவர்னர், ஒரு முதலமைச்சர், ஓர் அமைச்சரவை இருக்கும்.

2. 31-12-1988 அன்றோ அல்லது அதற்கு முன்போ கிழக்கு மாகாண மக்களின் கருத்தைப் பெற சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

அந்த வாக்கெடுப்பில்—

(அ) தொடர்ந்து வடமாகாணத்துடன் கிழக்கு மாகாணம் ஒரு நிர்வாக அமைப்பாக தொடர்ந்து ஆளப்படவேண்டுமா? (2-2 பந்தியில் கூறப்பட்டபடி)

(ஆ) தனி நிர்வாக அமைப்பாக, தனி மாகாண சபை, தனி கவர்னர், தனி முதலமைச்சர், தனி அமைச்சரவை ஆகியவற்றுடன் கிழக்கு மாகாணம் அமைய வேண்டுமா என்பது பற்றித் தீர்மானிக்கப்படும்.

இந்த சர்வஜன வாக்கெடுப்பை ஜனாதிபதி தனது சொந்த விருப்பத்தின் பேரில் ஒத்திப் போடலாம்.

3. இன வன்செயல்களினாலோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ இடம் பெயர்ந்தோர் இந்த சர்வஜன வாக்கெடுப்பில் வாக்களிக்க உரிமையுடையவர்கள். அவர்கள் பழைய இடங்களுக்குத் திரும்புவதற்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

4. சர்வஜன வாக்கெடுப்பைக் கண்காணிக்க பிரதம நீதியரசர் தலைமையிலான குழு ஒன்று நியமிக்கப்படும். ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இலங்கை அரசுப் பிரதிநிதி, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கிழக்கு மாகாணத் தமிழ்ப்பேசும் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி ஆகியோர் குழுவில் இருப்பர்.

5. சர்வஜன வாக்கெடுப்பு முடிவு சாதாரண பெரும்பான்மையால் தீர்மானிக்கப்படும்.

6. சர்வஜன வாக்கெடுப்புக்கு முன்னர் நாட்டின் சட்டங்களுக்கு உட்பட்ட முறையில் கூட்டங்கள் மற்றும் பிரசாரக் கூட்டங்கள் நடத்த அனுமதி அளிக்கப்படும்.

7. மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கு முன்னர் (எப்படியாவது 31-12-1987க்கு முன்னர்) நடத்தப்பட வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாண சபைகளின் தேர்தல்களுக்கு இந்திய அவதானிகள் அழைக்கப்படுவர்.

8. ஆகஸ்ட் 15அளவில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவசரகாலச் சட்டம் நீக்கப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திட்ட தினத்தில் இருந்து அடுத்த 48மணித்தியாலங்களில் போர்நிறுத்தம் அமுலுக்கு வரும். இலங்கை அரசு நியமிக்கும் அதிகாரிகளிடம் போராளிக் குழுக்கள் தற்போது வைத்திருக்கும் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும்.

வன்செயல் நிறுத்தம், ஆயுதம் ஒப்படைப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து இராணுவமும் மற்றும் பாதுகாப்புப் படைகளும் மே 25க்கு முன்னர் இருந்த நிலைக்குத் திரும்பிச் சென்று முகாமுக்குள் இருப்பர்.

வன்செயல் நிறுத்தம் அமுலுக்கு வந்த 72 மணித்தியாலங்களில் துருப்புக்கள் முகாமுக்குத் திரும்புவதும் ஆயுதங்களை போராளிகள் ஒப்படைப்பதும் இடம்பெற வேண்டும்.

9. நாட்டின் ஏனைய பகுதிகளில் செயற்படும் அமைப்புக்களை உபயோகித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் சட்டம், ஒழுங்கு பராமரிப்பு வேலைகளை இலங்கை அரசு மேற்கொள்ளும்.

10. பொது மன்னிப்பு! பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு உள்ள அரசியல் கைதிகள் மற்றும் கைதிகளுக்கு [illegible] பதி வழங்குவார். நீதிமன்றங்களில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், [illegible] ரும் இப் பொது மன்னிப்புத் திட்டத்தின் கீழ் அடங்குவர். தேசியப் பெரு வாழ்வில் போராளி இளைஞர்களை இணைத்துக் கொள்ளத் தேவையான மறு வாழ்வு வேலைகளை இலங்கை அரசு விசேட முயற்சிகளை எடுக்கும். இதற்கு இந்தியா உதவும்.

11. இது சம்பந்தமான விதிகளை ஏற்று இலங்கை அரசு நடக்கும்; அப்படி நடக்க வேண்டும் என்று ஏனையோரையும் இலங்கை அரசு எதிர்பார்க்கின்றது.

12. தீர்மானங்கள் மீதான அமைப்பு முறை ஏற்றுக்கொள்ளப்பட்டால், சம்பந்தப்பட்ட யோசனைகளை இலங்கை அரசு உடனே அமுல் நடத்தும்.

13. இத்தீர்மானங்களை உத்தரவாதப் படுத்துவதுடன் அதைச் செயல்படுத்துவதற்கான பொறுப்பையும் இந்தியா ஏற்றுக்கொள்ளும்; அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பையும் இந்தியா வழங்கும்.

14. 4-5-1986 தொடக்கம் 19-12-1986 வரையான பேச்சுக்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட யோசனைகளை இந்த யோசனைகளும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பது ஒரு நிபந்தனை.

குறிப்பிட்ட காலத்தில் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணப்படாத எஞ்சிய விஷயங்கள் குறித்து, ஒப்பந்தம் கைச்சாத்தான தினத்தில் இருந்து வரும் அடுத்த ஆறு மாத காலத்தினுள் இந்தியாவும் இலங்கையும் பேசித் தீர்வு காணும். இப்பேச்சுக்களில் உருவாகும் யோசனைகள் இந்திய அரசைக் கட்டுப்படுத்தும். அவற்றை அமுல் நடத்துவதில் இலங்கை அரசுடன் இந்திய அரசு நேரடியாக ஈடுபடும்.



ஒப்பந்தம் கைச்சாத்தாகிறது

### நிபந்தனைகள்:

தீர்வுக்கான சமரசத் திட்டத்தை இலங்கையில் உள்ள போராளி அமைப்புக்கள் ஏற்காவிட்டால் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டுப்பாடு இந்தியாவுக்கு உண்டு. அவையாவன:

அ. இலங்கையின் ஒற்றுமை, இறைமை, பாதுகாப்புக்குப் பாதகமாக இந்திய மண் பாவிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் சகல நடவடிக்கைகளையும் இந்தியா எடுக்கும்.

ஆ. இலங்கையைப் பாதிப்புக்குள்ளாக்கும் தமிழ்ப் போராளிகளின் நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு இலங்கைக் கடற்படைக்கு இந்தியக் கடற்படையின் கரையோரக் காவல் பிரிவு ஒத்துழைக்கும்.

இ. இந்த யோசனைகளை அமுல் நடத்துவதற்குத் தேவையான இராணுவ உதவிகளை இலங்கை அரசு கோருமிடத்து, இந்தியா அவற்றைக் கேட்டவுடன் கொடுத்து ஒத்துழைக்கும்.

ஈ. இலங்கையில் உள்ள இந்தியப் பிரசைகளைத் திருப்பி அழைக்கும் நடவடிக்கைகளை இந்தியா துரிதப்படுத்தும், ஆனால் தமிழ் நாட்டில் உள்ள இலங்கை அகதிகள் இலங்கைக்குத் திரும்புவதும் ஒரே நேரத்தில் இடம்பெற வேண்டும்.

உ. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல இன மக்களும் பத்திரமாகவும் உயிர்ப்பாதுகாப்புடனும் இருப்பதை உறுதிப்படுத்துவதில் இந்திய, இலங்கை அரசாங்கங்கள் ஒத்துழைக்கும்.

16. ஒப்பந்தத்தில் கூறப்பட்ட தேர்தல் நடைமுறைகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல இன வாக்காளர்கள் சுதந்திரமாகப் பூரணமாகப் பங்குபற்றுவதை இலங்கை அரசு உறுதிப்படுத்தும். இது சம்பந்தமாக இலங்கை அரசுக்கு இந்தியா பூரண ஒத்துழைப்பு வழங்கும்.

17. இலங்கையின் உத்தியோக மொழி சிங்களம். தமிழும் சிங்களமும் உத்தியோக மொழிகளாக இருக்கும்.

இந்த ஒப்பந்தமும் அதன் இணைப்பும் கையொப்பம் இட்டவுடன் நடைமுறைக்கு வரும்.

### ஒப்பந்தத்துடனான இணைப்பு:

1. பந்தி 2, அதன் உபபந்திகளில் கூறப்பட்டுள்ள சர்வசன வாக்கெடுப்பை அவதானிக்க இந்தியத் தேர்தல் ஆணைக்குழுவின் பிரதிநிதி ஒருவரை இலங்கை ஜனாதிபதி அழைப்பார். இந்தியப் பிரதமரும் இலங்கை ஜனாதிபதியும் இதற்குச் சம்மதம் தெரிவிக்கின்றனர்.

2. மேலும் பந்தி 2:8 கூறப்பட்ட மாகாண சபைகளின் தேர்தலை அவதானிக்கவும் இலங்கை ஜனாதிபதி, இந்திய தேர்தல் ஆணைக்குழுவின் பிரதிநிதி ஒருவரை அழைப்பார். இதற்கும் இலங்கை ஜனாதிபதியும் இந்தியப் பிரதமரும் சம்மதிக்கின்றார்கள்.

3, ஊர்காவல் படையைக் கலைக்க இலங்கை ஜனாதிபதி சம்மதிக்கின்றார். மாகாண சபைத் தேர்தலுக்குரிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள துணை இராணுவப் படைகளையும் விலக்கிக் கொள்ள இலங்கை ஜனாதிபதி சம்மதிக்கின்றார்.

இன வன்செயலைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட துணை இராணுவப்படைகளை இலங்கையின் நிரந்தரப் பாதுகாப்புப் படைகளுடன், தனது விருப்பத்திற்கு இணங்க இலங்கை ஜனாதிபதி இணைத்துக் கொள்ளலாம்.

4. இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவர்களிடம் தமிழ்ப் போராளிகள் தங்கள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்பதற்கு இலங்கை ஜனாதிபதியும் இந்தியப் பிரதமரும் சம்மதம் தெரிவிக்கின்றார்கள். இந்த ஆயுத ஒப்படைப்பு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சிரேஷ்ட பிரதிநிதி ஒருவர், இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் சிரேஷ்ட பிரதிநிதி ஒருவர் ஆகியோர் முன்னிலையில் இடம்பெற வேண்டும்.

5. 31-7-1987 இல் இருந்து வன்செயல் நிறுத்தத்தைக் கண்காணிக்க இலங்கை, இந்திய அரசாங்கங்களின் தகுதி வாய்ந்த பிரதிநிதிகள் அடங்கிய கூட்டுக்குழு ஒன்றை நியமிக்க இலங்கை ஜனாதிபதியும் இந்தியப் பிரதமரும் சம்மதிக்கின்றார்கள்.

6. தேவைப்படின், ஒப்பந்தத்தின் 2:14, 2:16(சி) பந்திகளின்படி வன்செயல் நிறுத்தத்தை அமுலுக்குக் கொண்டு வரவும் உறுதிப்படுத்தவும் இலங்கை ஜனாதிபதியினால் இந்தியாவில் இருந்து அமைதி காக்கும் படை ஒன்றை அழைக்கலாம் என்பதற்கு இந்தியப் பிரதமரும் இலங்கை ஜனாதிபதியும் சம்மதம் தெரிவித்திருக்கின்றார்கள்.

### இந்தியப் பிரதமர், இலங்கை ஜனாதிபதி ஆகியோரால் பரிமாறிகொள்ளப்பட்ட கடிதங்கள்

பிரதமர் ராஜீவ் காந்தியின் கடிதம் வருமாறு:-

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் அதற்கு மேலாகவும் இரு நாடுகளுக்கும் இடையில் நிலவி வரும் நட்புறவுவைக் கருத்தில் கொண்டும் இரு நாடுகளின் ஐக்கியம், பாதுகாப்பு, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதிக்கும் நடவடிக்கைகளை எம்மண்ணில் அனுமதிக்கக் கூடாது என்ற அவசியத்தை மீண்டும் உறுதிப்படுத்துவதுடன் பாரம்பரிய நட்புறவை வளர்க்க வேண்டிய முக்கியத்துவத்தை அங்கீகரித்தும்—

(2) இதே உணர்வுடன் இந்தியாவின் சில அக்கறைகளை நிறைவேற்ற எமது பேச்சுக்களின் போது நாம் இணங்கிக் கொண்டோம்.

அவை வருமாறு:-

(அ) இந்திய-இலங்கை உறவுகளுக்குக் குந்தகம் விளைவிக்காத முறையில் வெளிநாட்டு இராணுவ புலனாய்வுப் பிரிவுகள் இலங்கையில் இருப்பதை உறுதி செய்வது சம்பந்தமாக நீங்களும் நானும் விரைவில் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

(ஆ) இந்தியாவின் நலன்களுக்காகக் குந்தகம் விளைவிக்கக் கூடிய முறையில் திருகோணமலை உட்பட இலங்கையின் ஏனைய துறைமுகங்களை வேறு எந்த நாடும் இராணுவ ரீதியில் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது.

(இ) திருகோணமலை எண்ணெய்க் குதங்களைத் திருத்தி, பயன்படுத்தும் பொறுப்பை கூட்டுத் திட்டமாக இந்தியாவும், இலங்கையும் மேற்கொள்ளுதல்.

(ஈ) இலங்கை வெளிநாட்டு ஒலிபரப்பு அமைப்புகளுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்களை மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

அந்த அமைப்புகள் இலங்கையில் அமைத்துள்ள நிலையங்கள் வெறும் ஒலிபரப்பு வேலைகளுக்கு மட்டும்தான்: இராணுவ, புலனாய்வு நோக்கங்களுக்கு அல்ல என்பதை உறுதிப்படுத்துவதே இந்த மீளாய்வின் நோக்கம்

3. இதே உணர்வுடன் இந்தியா:-

(அ) பிரிவினையை ஆதரிக்கும் அல்லது பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடும் இலங்கைப் பிரசைகளை நாடு கடத்தும்.

(ஆ) இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்குப் பயிற்சி வசதிகளையும் இராணுவத் தளபாட விநியோகத்தையும் வழங்கும்.

4. முதலாவது பந்தியில் கூறப்பட்ட பொது அக்கறைகள் தொடர்பாகவும் ஏனைய விஷயங்களை அமுலாக்குவது தொடர்பாகவும் பரிசீலனை செய்து கொள்ள கூட்டு ஆலோசனைக் குழு ஒன்றை நியமிக்க இந்தியாவும் இலங்கையும் சம்மதிக்கின்றது.

5. எமக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவை மேலே சரியாகக் கூறப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு ஜனாதிபதி தயவு செய்து உறுதிப்படுத்துங்கள்.

எனது மிக உயர்ந்த கவனத்துடன் கூடிய உறுதி மொழிகளைத் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுங்கள்.

உங்கள் உண்மையுள்ள
ராஜீவ் காந்தி

### ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் உறுதி உரைக்கடிதம்

எமக்கு இடையே ஏற்பட்ட விளக்கங்கள் மேலே சரியாகக் கூறப்பட்டுள்ளன என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

எனது மிக உயர்ந்த கவனத்துடன் கூறிய உறுதி மொழிகளைத் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஜே. ஆர். ஜெயவர்த்தன.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# SCIENCE ACADEMY

## 44A, CLOCK TOWER ROAD, JAFFNA.

## இன்று 10 ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்து புதிய

# A/L 88, 89

## மாணவர்களுக்கான

சனி, ஞாயிறு பிரிவுகளை ஆரம்பிக்கின்றோம்.

**PHYSICS**



Sat, Sunday 8-30 ஒளியியல்
,, , 9-30 வெப்பவியல்
,, , 10-30 நிலை மின்னியல்
,, ,, 11-30 மின்னியல்

திரு. எஸ். மணியம் B Sc. (Hons) FIRST CLASS (சயன்ஸ் அக்கடமி ஆரம்ப கர்த்தா)

APP. PURE



திரு. வெக்டர் B Sc

விக்கி B. Sc. Sat, Sun. 1. 30 ஒளியியல்
,, ,, 2.30 வெப்பவியல
வடமராட்சி முன்னணி ஆசிரியர்

**88 BACH**

Sat. Sun. 7.30 App. தொடர்பு வேகம்
,, ,, 8.30 ,, காவி
,, ,, 9.30 PURE தொடர்

**89 BACH**

Sat. Sun. 11-30 PURE (பிரேம்)
,, ,, 12-30 App. (பிரேம்)

APP. / PURE



திரு. பிரேம்நாத் B. Sc.

[திரு. மணியம் அவர்களின் மாணவனும் சயன்ஸ் அக்கடமி பாதுகாவலரும்]

**CHEMISTRY**



திரு. வி. எஸ். ரஞ்சன் B. Sc.

Sat.Sun. 10.30 அடிப்படை இரசாயனம்
,, ,, 11-30 பொது இரசாயனம்
,, ,, 12.30 காபன் இரசாயனம்
,, ,, 1.30 பௌதிக இரசாயனம்

(வடமராட்சி மாணவர்களின் மதிப்புக்குரிய முன்னணி ஆசிரியர்)

நிர்வாகி



திரு. கணபதிப்பிள்ளை

யாழ் நகரில் சிறப்பாக பத்து ஆண்டுகள் சேவையாற்றி யுள்ளது எமது ஸ்தாபனம். தொடர்ந்தும் கடமையுடன் கட்டுப்பாடாக சிறந்த சேவை யாற்றவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகின்றோம்.

-- நிர்வாகி.


கடமை கட்டுப்பாட்டுடன் 10 ஆவது ஆண்டை நிறைவு செய்யும் சயன்ஸ் அக்கடமியை வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

★ நியூ விக்ரேஸ் ★
எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்
23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

Wish you all the Best Compliments from
T. NAGARATNAM

இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைக ளியற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிர நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத் தறிவித்தல்
-- மகாகவி பாரதியார்

செட்டியார் அச்சகம்
யாழ்ப்பாணம்.

பல்லாண்டுகள் நிலையான சேவையாற்றி வரும் சயன்ஸ் அக்கடமியை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

T. ரவிமோகன்
தூய, பிரயோக கணித ஆசிரியர்,
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்,

A/L மாணவர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கம் SCIENCE ACADEMY
✯ வாழ்த்துபவர்கள் ✯
T.R குணசேகரம்
27, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
சகல வாகனங்களுக்கும் தேவையான ரயர், ரியூப் சில்லறையாகவும் மொத்த மாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

★ தொடர்ந்தும் சேவையாற்ற வேண்டி ★
சயன்ஸ் அக்கடமியை வாழ்த்துகின்றோம்
KUNAM VIDEO CENTRE
குணம் வீடியோ சென்ரர்
42, Clock Tower Road, Jaffna.
(The best Video Library in the Heart of Jaffna.)

மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ள அக்கடமியை
✯ வாழ்த்துகின்றோம் ✯
வைத்திலிங்கம்
மரக்காலை & அரிவு ஆலை
பலாலி ரோட், திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

வாழ்த்துபவர்கள்
MINI TRADE CENTRE
8, Stanley Road. Jaffna.
எங்களிடம்
சகலவிதமான ரேடியோ, T. V. டெக் ஆகியவற்றின் உதிரிப்பாகங்கள் நிதான விலையில் நம்பிக்கையுடன் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அதி நவீன வீடியோ புறஜெக்டர்கள் இறக்குமதி செய்து தரப்படும்

இன்னும் பல்லாண்டு சேவையாற்ற
✯ வாழ்த்துவோர் ✯
✶ மோட்டர்பம் தயாரிப்பு,
✶ எஸ்லோன் பைப் பொருத்துனர்,
கடைச்சல் வேலையில் நிபுணர்களாகிய
தேவி இன்டஸ்றீஸ்
21/2 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர்கள் மத்தியில் பிரகாசிக்கும் கல்வி நிலையத்தை வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.
செல்வா வீடியோ
(வீடியோ படப்பிடிப்பாளர்கள்)
18, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
21, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

✶ ஆசிர்வதிக்கிறோம் ★
ஆசீர்வாதம் ஸ்ரோர்ஸ்
46 [256] ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
எங்களிடம் பாடசாலை உபகரணங்கள் காரியாலய காகிதாதிகள் மற்றும் சகல பேப்பர் வகைகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

சுயநலமற்ற சேவையாற்றி வரும் கல்வி நிலையத்தை வாழ்த்துகின்றோம்.
யாழ்நகரில் தரமான குளிர்பான வியாபாரிகள்
லிங்கம் கூல் பார்
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஆயுதம் கையளித்த பின்னர்;

# ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டால் இந்தியாவே அதற்குப்பொறுப்பு

## பிரபா அளித்த பேட்டி

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் கடந்த புதனன்று திருநெல்வேலியில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் முதற் பகுதி கடந்த வெள்ளிகிழமை உதயனில் பிரசுரமானது. இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

கேள்வி:- இனி வரக்கூடிய, இந்திய மேற்பார்வையிலான தேர்தலில் மற்றக் கட்சிகள் பங்கு பற்றினுல் அதை நீங்கள் எதிர்ப்பீர்களா?

பிரபா:- ஏனைய கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதற்கும் எமக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை.

கேள்வி:- எல். ரி. ரி. ஈ., அந்தத் தேர்தலில் பங்குபற்றுமா?

பிரபா:- தேர்தல் வரும்போது யோசிப்போம், இப்பொழுது எல்லாம் மின்னல்மின்னுவது போன்று நடைபெற்றுக்கொண்டு வருகிறது. தேர்தலும் அப்படி வரும்போது அதைப் பற்றி முடிவெடுப்போம்.

கேள்வி:- தற்பொழுது உங்கள் அரசியல் நிலை எவ்வாக இருக்கும்?

பிரபா:- இப்பொழுது இருப்பதைப் போன்று தொடர்ந்தும் இருந்து வருவோம். மக்களுக்கு நடந்தவற்றை விளங்கவைப்போம்.

கேள்வி:- இந்த ஒப்பந்தத்தில் உள்ள பலவீனங்களைப்பற்றி மக்களுக்குச் சொல்வீர்களா?

பிரபா:- ஆம், தெரியப்படுத்துவோம். அதன் பலவீனங்களை நாம் சொல்லத்தான் வேண்டும், மக்களின் கேள்விகளுக்கு நாம்தான் பதிலளிக்கவேண்டும்.

கேள்வி:- ஆயுதங்களுடன் தொலைத் தொடர்பு சாதனங்களையும் ஒப்படைப்பீர்களா?

பிரபா:- இப்பொழுது இல்லை—எதற்கும் ஒரு முடிவு வரவேண்டும். இன்னும் நாடாளுமன்றத்தில் ஒப்பந்தம் நிறைவேறுவதைக் காணவில்லை. அதனுல் இவற்றையெல்லாம் ஒப்படைக்கவேண்டிய அவசியம் இப்பொழுது இருக்காது.

கேள்வி:- ஆயுதங்கள் கையளிக்கப்பட்ட பின்பு ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

பிரபா:- அதற்கு இந்தியாவே பொறுப்பு.

கேள்வி:- அகதிகள் குடிஅமர்த்தப்படும் போர்வையில் சிங்களவர்கள் குடியமர்த்தப்படுகிறார்களே, அதற்கு என்ன செய்கிறீர்கள்?

பிரபா:- உண்மை, இதை இந்திய அரசுக்குத் தெரிவித்துள்ளோம்.

கேள்வி:- ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் போது சொன்னுர்கள் சகலகைதிகளும் விடுதலையாவர் என்று ஆனல் நேற்று வந்த செய்தியின்படி வணபிதா சிங்கராயர் உட்பட 15 கைதிகள் தான் விடுதலையாவர் என்கிருர்களே! அதனைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்.

பிரபா:- அதற்கும் இந்தியாவே பொறுப்பு.

கேள்வி:- சிங்களக் கைதிகளை நீங்கள் விடுவிப்பீர்களா?

பிரபா:- இல்லை தமிழ் கைதிகளை சிறையில் இருந்து விடுவிக்கும்வரை



பிரபா

நாங்களும இவர்களை விடமாட்டோம்.

கேள்வி:- முஸ்லிம்கள் மலையகமக்கள் சம்பந்தமாக இந்த ஒப்பந்தத்தில் ஏதாவது கூறப்பட்டுள்ளதா?

பிரபா:- எங்களுக்கே சரியாகத் தெரியாது.

கேள்வி:- நீங்கள் கோடிக்கணக்கான செலவில் நவீன ஆயுதங்களை வாங்கினீர்கள். அதை இப்பொழுது இந்திய அரசாங்கத்துக்குகொடுக்கிறீர்கள். இதற்காக உங்களுக்கு நஷ்டஈடு கிடைக்குமா?

பிரபா:- அப்படி எந்தவித உறுதியும் இல்லை. தமிழ் மக்களை அகதிகளாக வைத்திருந்த இந்திய மக்களின் மனம் புண்படக் கூடாது என்பதற்காகவே ஆயுதங்களை வழங்குகின்றோம்.

கேள்வி:- இவ்வளவு காலமும் தமிழ் மக்களின் பாதுகாப்பை நாங்கள் உறுதி செய்வோம் என்று சொல்லி வந்தீர்கள். இன்று ஏன் மக்களின் பாதுகாப்பை வேறு ஆட்களிடம் கையளிக்கின்றீர்கள்?

பிரபா:- நாம் கையளிக்கவில்லை.

கேள்வி:- அப்படியானுல் நீங்கள் அதை ஏன் எதிர்க்கவில்லை?

பிரபா:- நாங்கள் இந்திய அரசுக்கு எதிராகப் போராடவில்லை. இதை மக்கள்தான் எதிர்க்கவேண்டும். இதனுல் என்ன நன்மை தீமை என்பது போகப்போகத் தான் தெரியும்.

கேள்வி:- தமிழரின் பாதுகாப்பை இந்திய இராணுவம் நிலை நிறுத்தும் என நீங்கள் நம்புகிறீர்களா?

பிரபா:- அப்படித் தான் நினைக்கிறோம். ஆனுல் அவர்களால் பாதுகாக்க முடியாவிட்டால் அவர்களுக்கெதிராக தமிழ் மக்கள்முறையிடக்கூடும். அப்பொழுது உலகத்துக்குத் தெரியும். தமிழ் மக்களுக்காக வந்தவர்கள் ஏன் அவர்களின் நலன்களைப் பாதுகாக்கமுடியவில்லை என்பது.

கேள்வி:- உங்களால் தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் நிலை என்ன?

பிரபா:- ஒருவரிடமும் ஆயுதம் இல்லை ஆகவே எல்லோருமே ஒரே நிலை.

கேள்வி:- உங்களிடம் இருக்கும் ஆயுதங்களை உங்களுக்குத் தெரியாது என்று சொல்கிறீர்கள். அப்படியானுல் எல்லா ஆயுதங்களும் கொடுத்தாகிவிட்டதென்று எப்படித்தெரியும்?

பிரபா:- நாங்கள் எங்களிடம் உள்ள எல்லா ஆயுதங்களையும் ஒப்படைப்போம். அதை நம்புவதும், விடுவதும் கையேற்பவர்களைப் பொறுத்தது.

கேள்வி:- ஆயுதம் கையளிக்கும் நிகழ்ச்சி எப்பொழுது நிறைவு பெறும்?

இரண்டு, மூன்று நாட்களில் முடிவடையும்.

கேள்வி:- ஆயுதங்களை யார் ஒப்படைப்பார்?

பிரபா:-யோகி ஒப்படைப்பார்.

கேள்வி:- இன்று உங்கள் உணர்ச்சிகள் கசப்பாக இருக்கின்றனவே. ஏன்?

பிரபா:- நாங்கள் இப்பொழுது நடக்கும் நிகழ்ச்சிகளை விருப்பமில்லாமல் தான் செய்துகொண்டிருக்கின்றோம்.

கேள்வி:- இப்படி விரும்பத்தகாத முடிவுகளை முன்னர் எடுத்திருக்கின்றீர்களா?

பிரபா:- இல்லை.

கேள்வி:- ஆயுதம் ஒப்படைக்கும் முடிவுக்கு உறுப்பினர்கள் அனைவரும் ஒப்புக்கொள்வார்களா?

பிரபா:- இயக்கம் எடுக்கும் எந்த முடிவுக்கும் அவர்கள் கட்டுப்படுவார்கள்.

கேள்வி:- ஆயுதங்களை ஒப்படைக்க சட்டளையிட்டீர்களா?

பிரபா:- இல்லை,கூடி முடிவெடுத்தோம்.

கேள்வி:- உங்கள் இயக்கத்தில் இருக்கும் பையன்களை என்னசெய்யச் சொல்லப்போகிறீர்கள்?

பிரபா:- அவர்கள் பையன்கள் அல்ல, தெளிவோடு போராட வந்த போராளிகள். அவர்களை இலங்கை அரசு படிக்கவிடாததனுல்தான் அவர்கள்

(2 ஆம் பக்கம் பார்க்க)


- சர்வதேச தொலைபேசி
- சர்வதேச ரெலக்ஸ்
- உள்ளூர் தொலைபேசி
- உள்ளூர் ரெலக்ஸ்

சேவை நேரம் காலை 6 00 மணி தொடக்கம்
மாலை 6 00 மணி வரை தொடர்ச்சியான சேவை

இரவுநேர சேவைக்கு முன் கூட்டியே பதிவு செய்தால் குறிப்பிட்ட நேரத்தில் சேவைசெய்து தரப் படும்.

உங்களின் இல்லங்களிலோ வியாபார காரியாலயங்களிலோ உள்ள தொலைபேசியில் - வெளிநாடுகளில் உற்றுர், உறவினர், நண்பர்களுடன் தொலைபேசியில் செய்திகள் பரிமாறுவதற்கு எங்களை நாடுங்கள்.

**மு. காசிப்பிள்ளை**

**சகோ புத்திரர்கள்**

இல, 2, கந்தசாமிகோவில் வீதி,
வவுனியா.



**உங்கள் தேவைகளை உடன் பூர்த்திசெய்ய வேண்டுமா?**

**திருத்தவேலைகள்**
- மின்சார உபகரணங்கள்
- தொலைக்காட்சி (T. V.)
- Antenna

**பூச்சுவேலைகள்**
- வீடுகள்
- குளிர்சாதனப் பெட்டி
- கார்கள்
- மோட்டார் சைக்கிள்

வீட்டில் நீர்வழங்கற் குழாய் வேலைகள் (PLUMBING) வீட்டில் மின்சார (WIRING) வேலைகள் என்பன செய்து கொடுக்கப்படும்.

✶ மேற்குறிப்பிட்ட வேலைகள் யாவும் தரமான தொழில் நுட்பவியலாளரால் மேற்பார்வை செய்யப்படும்.

✶ **தோட்டம் விற்பனைக்கு**

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் தபாற்கந்தோர் வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட 1500 சதுர அடி அடங்கிய சகல வசதிகளையும் கொண்ட வீடும், மேட்டுப் பயிர்செய்யக்கூடிய மூன்றரை ஏக்கர் காணியும் நல்ல தண்ணீர் வற்றுத கிணற்றுடனும் உடனடியாக 1000 கோழிகள், 15 மாடுகள் வளர்க்கக்கூடிய கட்டிடத்துடனும் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

**MACK AUCTIONEERS AND BROKERS**

இல. 8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
Telephone:- 24791, 24836



**ஆள் தேவை**

குளிரூட்டப்பட்ட வீடியோ கிளப்பிற்கு ஒரு பெண்பிள்ளை தேவை. நடுத்தர வயதுடைய அழகுள்ளவரும் வியாபாரம் செய்யக்கூடிய தன்மையும் உடையவராக இருத்தல் விரும்பத்தக்கது. தங்குமிட வசதியுள்ளவர்கள் நல்லது அப்படி இல்லாதவர்களுக்கும் ஒழுங்கு செய்யலாம். பொறுப்புக்கள் இல்லாதவர்கள் நன்று விண்ணப்பதாரிகள் கடிதமூலமோ, நேரிலோ தொடர்பு கொள்ளலாம்.

**ஷோபஹுஸ்**
**வீடியோ சென்டர்**
கந்தசுவாமி கோவில் வீதி, வவுனியா.



**போட்டோ ஸ்ரற் பிரதி செய்தல்**

எம்மால் புதிதாக தருவிக்கப்பட்ட நவீனகம்பியூட்டர் கனன் NP-271 (CANNON NP-271 Computerized) மூலம் திருப்தியான, தரமான போட்டோ ஸ்ரற் பிரதி செய்து தரப்படும்.

- சிறந்த போட்டோ ஸ்ரற் பிரதிக்கு

★ **ஞானம்ஸ் ஸ்ரூடியோ**
யாழ்ப்பாணம்



★ வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க ★


## இலவசம்!
## விளம்பரம் ஒன்று இலவசம்!!

துரிதமாக விற்க! வாங்க!
மாற்றீடு செய்ய!!

இந்த அரிய சந்தர்ப்பம் சில நாட்களுக்கே!
ஒரு செலவில் இரு விளம்பரங்கள்!!

கல்வி, பிறந்தநாள் வாழ்த்துக்கள், விற்பனை, தேவை, மணப்பந்தல், காணி விற்பனை, வேலைவாய்ப்பு இவைகளில் எவையாயினும் புதன், ஞாயிறு உதயன் ''சின்னஞ்சிறு விளம்பர''ப் பகுதியில் விளம்பரப்படுத்துவதன்மூலம் அதிக பயனடையுங்கள்.

★ நீங்கள் செய்யவேண்டியது இதுவே:

1. உங்கள் விளம்பரத்தை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சலுகைக் கட்டணக் கூப்பனில் எழுதுங்கள்.
2. சொற்களைக் கணக்கிட்டுச் செலவைக் கணியுங்கள்.
3. பூர்த்திசெய்த விண்ணப்பத்தையும் பணத்தையும், விளம்பரப் பகுதி: நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட், 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் சமர்ப்பியுங்கள்.

★ இந்தக் கூப்பனில் பதியப்பட்டு பணம் செலுத்தப்பட்ட ஒவ்வொரு விளம்பரமும் இலவசமாக மீள்பிரசுரிக்கப்படும். இச்சலுகை 1987 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ஆம் திகதி வரையுமே செல்லுபடியாகும்.

**எமது விளம்பரக் கட்டணம்:**

முதல் 20 சொற்கள் ரூபா 15-00
மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் 50 சதம்
(ஆகக் கூடிய சொற்கள் 35)

★ ''மேற்பார்த்து'' குறிப்புடைய விளம்பரங்களுக்கு விளம்பர முழுக் கட்டணத்துடன் ரூபா 10-00 மேலதிகமாக அறவிடப்படும். விளம்பரதாரர்கள் நேரடியாகக் காரியாலயத்துக்குவந்து கடிதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**சின்னஞ்சிறு விளம்பரம் உதயன்**
**சலுகைக் கட்டணக் கூப்பன்**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

பிரசுரிக்க வேண்டிய திகதி:—......................................

பகுதி:— ......................................

இலவசமாக மறுபிரசுரம் செய்ய விரும்பும் திகதி:— ......................

பெயர் :— ......................................

விலாசம்:—......................................

......................................

சொற்கள்:.............................செலவுத் தொகை: ...................

திகதி,—....................

......................................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

ஒருவன் மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே; மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே; உன்னைச் சுத்தவானுகக் காத்துக்கொள்.

— பைபிள்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
09.8.1987 த.பெ.இல: - 23


## ஒரு வழி உண்டு!

"ஈழத் தமிழ் மக்களைப் பாதுகாக்கும் முழுப்பொறுப்பும் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. அந்தப் பொறுப்பை இந்தியா சரிவரச் செய்யும் என்று ஒவ்வொரு தமிழனும் எதிர்பார்க்கிறன்..."

இவ்வாறு கடந்த வியாழக்கிழமை இப்பத்தியில் எழுதியிருந்தோம். அந்த எதிர்பார்ப்பில் மண் தூவுவதுபோல, வடக்கு கிழக்கின் பல பகுதிகளில் ஸ்ரீலங்காவின் அரச படைகள் தமிழர்களை இம்சைப்படுத்தி இருக்கின்றன; கொடுமைப்படுத்தி இருக்கின்றன. நிராயுதபாணிகளான போராளிகளையும், பொது மக்களையும் தாக்கி இருக்கிறார்கள்; சித்திரவதை செய்திருக்கிறார்கள்.

போராளிகள் இருவரைப் பூநகரியில் கொலை செய்ததாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. நயினாதீவில் பிரயாணிகள் தாக்கப்பட்டார்கள். அதுபோன்றே நெடுந்தீவுக் கடலில் மீனவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். மட்டக்களப்பில், திருகோணமலையில், முல்லைத்தீவில் என்று தமிழ் மண் எங்கும் ஸ்ரீலங்காப் படையினர், ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னரும் தமது அடாவடித்தனத்தைக் காட்டியுள்ளனர்.

அமைதி காக்கும் படையாக வந்திருக்கும் இந்தியப் படைகளை மிஞ்சும் விதத்தில் தமது வழமையான அரக்கத்தனத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

கடந்த நான்கு வருடங்களாகத் தாம் செய்த அட்டூழியம் எதையும் ஸ்ரீலங்காப் படைகளோ அவற்றுக்குப் பொறுப்பான பந்தோபஸ்து அமைச்சோ அல்லது அமைச்சரோ ஒப்புக்கொண்டதில்லை. தங்களைவிட மெத்த நல்ல பிள்ளைகள் இந்த உலகத்தில் இல்லை என்பது போல படைகள் செய்யும் அத்தனை குற்றங்களையும் அரசாங்கம் பூசி மெழுகி மறைத்து வந்தது உலகம் அறிந்த உண்மை.

அதே போலத்தான், ஒப்பந்தத்தின் பின்னர், போராளிகள் ஆயுதங்களைக் கையளித்த பின்னர், தாம் செய்த அட்டூழியங்களையும் ஸ்ரீலங்கா அரசபடைகள் மறுத்துரைக்கும். அமைதி காக்க வந்திருக்கும் இந்தியப்படைகளின் உயர் அதிகாரிகள் இதனைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

தமிழர்களை இம்சைப்படுத்தியும், அவர்களின் இரத்தத்தைக் குடித்தும் ருசி கண்டவர்கள் மீண்டும் அவற்றைச் செய்யவே முயலுவார்கள். அவர்களின் கொட்டத்தை அடக்கி, தமிழ்மக்களுக்கும் குறிப்பாக நிராயுதபாணிகளாகிவிட்ட போராளிகளுக்கும் பாதுகாப்பு வழங்குவது இந்திய அமைதிப்படையின் மிக மிக முக்கியமான பொறுப்பு மட்டுமன்றி, கடமையும் ஆகும்.

அதிலிருந்து தவறினுல் அமைதிப் படைக்குரிய மதிப்பும் மகிமையும் இல்லாமற் போய்விடும். பாதிக்கப்பட்டவர்களுக்கு இருந்த பாதுகாப்பைப் 'பறித்தெடுத்து' அவர்களைப் பலவீனப்படுத்திவிட்டு, பாதிப்பை ஏற்படுத்தியவர்களைத் தொடர்ந்தும் அதனைச் செய்ய அனுமதிப்பது அநியாயம்; அதர்மம்.

இதனை இந்திய அமைதிப்படை உயர் அதிகாரிகளும் இந்திய அரசும் நன்கு உணரவேண்டும். மெலியவனை மேலும் நலியச் செய்துவிட்டு, வலியவன் பக்கம் நின்று அவன் செய்யும் 'நட்டாமுட்டி'த் தனங்களை அனுமதிப்பது ஒருபோதும் நீதியாகாது. அமைதிக்குத் துணை புரியாது. வலியவனுக்குத் துணை போவதைவிட மெலியவனுக்கு உதவி புரிவதே நீதியும் தர்மமும் ஆகும்.

தமிழ்ப் போராளிகளிடம் இருந்து ஆயுதங்களைப் 'பறித்த' இந்திய அரசு ஈழத்தமிழர்களின் பாதுகாப்பை நூறு வீதம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இலங்கை ஜனாதிபதியின் அதிகாரத்துக்கு உட்பட்டுப் பணிபுரியும் இந்தியத் துருப்புகளால் அதே ஜனாதிபதியின் சொந்தப் படைகளைத் தண்டிக்கும் அதிகாரம் இருக்குமா என்பது சந்தேகம்.

அதாவது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் ஸ்ரீலங்காப் படைகளை நீதியின் பெயராலோ அல்லது தர்மத்தின் பெயராலோ தானும் அமைதிப் படைகளால் தண்டிப்பது ஒருபுறமிருக்கக் கண்டிக்கவாவது முடியுமா என்பது கேள்விக்குறி.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு இந்தியப் படையினர் பூரண பாதுகாப்பு அளிக்க வேண்டுமானால், தமிழ் மண்ணிலிருந்து ஸ்ரீலங்காப் படைகளை முற்றுமுழுதாக வெளியேற்ற வேண்டும். அவர்களையும் இங்கு வைத்துக்கொண்டு அமைதி பேணுவதும், தமிழருக்குப் பாதுகாப்பு அளிப்பதும் முயற்கொம்பாக முடியும்.

இன்று நடக்கும் ஊர்த்தால் இந்தியாவுக்கு அதனை எடுத்துக் கூறுவதாக அமைய வேண்டும். மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு இக்கோரிக்கையை இந்தியா முன்வைக்க வேண்டும்.

### அமெரிக்க செய்மதி நிலையம்

அமெரிக்க செய்மதி தொடர்புநிலையம் ஒன்று பனமாக் கால்வாய்ப் பிராந்தியத்தில் நிறுவப்பட்டுள்ளது.

இது பனமாவில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பனமா நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் இதை நிறுவுவதற்கு முன்னர் அமெரிக்கா பெற்றுஇருக்கவேண்டும்.

ஆனால் அப்படி அனுமதி பெறப்படவில்லை.

(இ-எ)

### ● பெனஸிர் திருமணம் செய்ய முடிவு

இஸ்லாமாபாத், ஆக 8

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவியான செல்விபெனுசிர்பூட்டோ (வயது 34) திருமணம் செய்துகொள்ள முடிவு செய்துவிட்டார்.

34 வயதான ஆஸிப் சர்தாரி என்ற நிலச்சுவான்தாரையே அவர் மணம் புரிய உள்ளார்.

இந்திய உபஜனாதிபதி தேர்தல்

# இதுவரை 7 பேர் நியமனப்பத்திரம் சமர்ப்பித்தனர்

புதுடில்லி, ஆக. 8

இந்திய உபஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக இதுவரை 7 பேர் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

இவர்களில் மூவர் தபால் மூலம் தங்கள் நியமனப் பத்திரங்களை அனுப்பி வைத்தனர்.

தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் நியமனப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் கடைசித் திகதி இம்மாதம் 18 ஆம் திகதி ஆகும்.

இந்திய நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளையும் (லோக்சபா, ராஜ்யசபா) சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் உப ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க உரிமையுடையவர்கள்.

தேர்தல் அடுத்த மாதம் 7 ஆம் திகதி நடைபெறும். அன்றைய தினமே வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப் படும். (இ-எ)

### றேகனின் ஆலோசகர் ராஜினமா

வாஷிங்டன், ஆக. 8

அமெரிக்க அதிபர் றேகனின் ஆயுதக்கட்டுப்பாட்டு ஆலோசகர் கென்னத் அடல்மன் ராஜினமாச் செய்துவிட்டார்.

செப்டம்பர் 15 இல் அமெரிக்க - சோவியத் வெளியுறவு அமைச்சர்கள் உச்சி மாநாடு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட சில மணித்தியாலங்களில் அவரின் ராஜினமா அறிவிக்கப்பட்டது.

(இ-எ)

### இந்தியக் கப்பல் மூழ்கியது

லண்டன், ஆக. 8

இந்தியச் சரக்குக் கப்பல் 'விஷ்வ அபூர்வ' கிரேக்கக் கப்பல் ஒன்றுடன் மோதி கடலினுள் மூழ்கியது.

சூயஸ் கால்வாயை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது இச்சம்பவம் இடம்பெற்றது.

## தமிழ் நாட்டில் இன்று ஒப்பந்த வெற்றிவிழா!

சென்னை, ஆக. 9

இந்திய-இலங்கை ஒப்பந்த வெற்றி விழாவை அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் இன்று ஞாயிற்றுக்கிழமை தமிழ் நாடு முழுவதும் கொண்டாடுகின்றது.

அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் முதலமைச்சருமான எம் ஜி இராமச்சந்திரனின் விருப்பத்துக்கு இணங்க சிறப்புக் கூட்டங்கள் இன்று ஞாயிறு 9-8-1987 தமிழகமெங்கும் நடத்தப்படும்.

இப்படி அ.தி.மு.க. பிரசாரச் செயலாளர் செல்வி ஜெயலலிதா எம்.பி அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்

## வெளிநாட்டுத் தலையீடு எதுவும் இல்லையாம்

கொழும்பு, ஆக. 9

பிரதமர் ராஜீவ் காந்தியை இலங்கைக் கடற்படைச் சிப்பாய் தாக்கிய சம்பவத்தில் வெளிநாட்டுத் தலையீடு எதுவும் இல்லை.

இப்படி கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணையில் இது தெரிய வந்ததாய் அப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையில் கொழும்பு புலனாய்வுப் பிரிவு தொடர்ந்து விசாரணை நடத்துகின்றது அச் சிப்பாய்க்கும் தடைசெய்யப்பட்ட ஜே வி. பி. இயக்கத்துக்கும் இடையே தொடர்பு உண்டா என்பதை அறியவே இவ் விசாரணை நடைபெறுகின்றது.

(அ-எ)

# சாவகச்சேரிப்பகுதியில் 4 இந்திய முகாம்கள்

சாவகச்சேரி, ஆக. 9

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வரணி, கொடிகாமம், சாவகச்சேரி, சரசாலை ஆகிய நான்கு இடங்களில் இந்திய இராணுவ முகாம்கள் நிறுவப்பட இருக்கின்றன என்று தெரியவருகிறது.

இந்திய இராணுவத்தினர் ஐவர் கொண்ட குழு உதவி அரசாங்க அதிபருடன் சென்று பொருத்தமான இடங்களைப் பார்வையிட்டுள்ளது,

இம்முகாம் ஒன்றிலும் 200 இந்திய வீரர் இருப்பார்கள் எனவும் அமைதியையும், சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாப்பது இவர்களின் கடமையாக இருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இக்குழுவினர் சாவகச்சேரி நவீனசந்தைப் பக்கம் வந்தபோது பொது மக்கள் முந்திரிகைப் பழம், குளிர்பானம் ஆகியவை கொடுத்து வரவேற்றனர்.

(இ-31

### ● விறகு பொறுக்கும் மக்கள்

குருநகர், ஆக. 9

யாழ். மாநகர சபை, பொது நூலகம், திறந்த வெளி அரங்கு, மணிக்கூண்டுக் கோபுரப் பகுதிகளில் ஏராளமானேர் விறகு சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளனர் நீண்ட காலமாக இப்பகுதி ஜனசஞ்சாரம் இன்றி இருந்ததால் ஒரே குப்பை கூழமாகக் காணப்படுகிறது.

## யாழ் நகரில் இந்திய நிவாரணப் பொருள்கள் விநியோக வேலைகள்

யாழ்ப்பாணம், ஆக.9

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் இந்திய உதவி நிவாரணப் பொருள்கள் வழங்கும் வேலைகள் ஆரம்பமாகி விட்டன.

ஏற்கனவே அரசாங்கத்தினுல் வழங்கப்பட்ட நிவாரணங்களுக்கான உத்தரவுப் பத்திரம் பெற்றவர்களுக்கே இந்திய நிவாரணப் பொருள்களுக்கான உத்தரவுப்பத்திரங்களும் வழங்கப்பட உள்ளன.

வண்ணார் பண்ணை தென்கிழக்கு கிராம சேவை அலுவலர் பிரிவில் பாதிக்கப்பட்டு ஏற்கனவே அரச நிவாரணத்துக்கான உத்தரவுப் பத்திரம் பெற்றவர்களை அடையாளக் கார்ட்டுடன் ஆனைப்பந்தியில் உள்ள தமது காரியாலத்துக்கு வந்து இந்திய நிவாரணத்துக்கான உத்தரவுப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கிராம சேவை அலுவலர் திரு. வி. கே. தளையசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பின்வரும் சங்கக் கடைக்கிளைகளில் அல்லது உத்தரவு பெற்ற வியாபாரிகளிடம் நிவாரணத்துக்காக ஏற்கனவே தமது பெயர்கள் உள்ளோர் பின்வரும் திகதிகளில் வந்து உத்தரவுப்பத்திரத்தைப்பெறும்படி வேண்டப்படுகின்றனர்.

11 8. 87 செவ்வாய்க்கிழமை காலை யாழ். ப. நோ. கூ. சங்கம்கிளை 15. ஆரியகுளம், மாலை கிளை. 10. பெருமாள் கோயிலடி.

12-8-87 புதன்கிழமை மாலை உத்தரவுபெற்ற வியாபாரி எஸ். செல்லத்துரை, கே. வி. தம்பு, திருமதி,கே. நல்லதம்பி,

13- 8- 87 வியாழன் காலை யாழ். ப. நோ. கூ. சங்கம் கிளை. 7. வெள்ளாந்தெரு, உத்தரவு பெற்ற வியாபாரிகள் கே.செல்வரத்தினம், கே. வி. சின்னத்துரை, விஜயலட்சுமி ஸ்டோர், மற்றும் ஏனைய வியாபாரிகள். (இ)

### பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஆக. 9

மடு தேவாலய உற்சவத்தை முன்விட்டு எதிர்வரும் 12ஆம் திகதிமுதல் யாழ்ப்பாணத்தில் இருந்து விசேட பஸ் சேவைகள் நடத்தப்பட உள்ளன.

தினமும் காலை 7 30 மணிக்கு பஸ்கள் யாழ். பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உற்சவ காலம் முடியும் வரை இந்த பஸ் சேவைகள் நடத்தப்படும்.

## ஒப்பந்தத்தை ஜே. ஆர். மீறவில்லை ராஜீவ் கூறுகின்றார்

புதுடில்லி, ஆக. 9

கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த வாசகங்களுக்கு அப்பால் ஜனாதிபதி ஜெயவர்த்தன செல்லவில்லை.

—இப்படி பிரதமர் ராஜீவ்காந்தி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்திய இராணுவ உதவியைப் பெற்றுக் கொண்ட பின்னர் பாகிஸ்தான், சீன ஆகிய நாடுகளிடமிருந்து ஜனாதிபதி ஜெயவர்த்தன இராணுவத் தளபாட உதவிகளைக் கோரியுள்ளாரே. இதுபற்றி உங்கள்கருத்து என்ன?

—இப்படி ஒரு செய்தியாளர் பிரதமரைக் கேட்டார்.

பதிலளிக்கையில் பிரதமர் காந்தி சொன்னதாவது :-

ஒப்பந்தத்துக்கு அப்பால் ஜனாதிபதி ஜெயவர்த்தன செல்லவில்லை. எல்லாம் ஒப்பந்தத்தில் எழுதப்பட்டுள்ளன. பரிமாறப்பட்ட கடிதங்களில் எல்லாம் அடங்கியுள்ளன.

பிரச்சினை ஒன்றுமே இல்லை. என்னதான் செய்யினும் அது பரிமாறப்பட்ட கடிதங்களில் கூறப்பட்டபடியே அமைந்து இருக்கும்.

கேள்வி: ஜெயவர்த்தனவுக்கும் அவரின்பிரதமருக்கும்இடையே தகராறு என்றுகூறப்படுகின்றதே!

பிரதமர்: பிரதமர்களுடன் ஜனாதிபதிகளுக்கும் ஜனாதிபதிகளுடன் பிரதமர்களுக்கும் பிரச்சினைகள் வருவது சகஜம் தானே!

கேள்வி: இந்த ஒப்பந்தம் இலங்கை நிலையை பூட்டான் தரத்துக்கு குறைத்து விடுமா?

பிரதமர்: பூட்டானும் இறைமையுள்ள ஒரு நாடு அதன்மீது இந்தியாவின் மேலாதிக்கம் [illegible] (உ-எ)

### பிரசைகள் குழுக்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 9

வன்செயல்களினுல் பெரிதும் பாதிக்கப்பட்ட இடங்களுக்குத் தேவையான நிவாரணம்பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும், தேவையானுல் உடனடியாக உதவவும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஓர் செயற்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கு வேண்டிய தகவல்களைப் பெற பிரசைகள் குழுத் தலைவர்கள், செயலாளர்கள் குறிப்பாக வலிகாமம் - வடமராட்சியைச் சேர்ந்த பிரசைகள் குழுக்கள் 15 ஆம் திகதி காலை 10 மணிக்கு நல்லூர், செட்டித்தெரு இல: 91 இல் இயங்கும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு சமுகம் தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

பல பிரசைகள் குழுக்களின் முகவரிகள் மாறி உள்ளபடியால் இவ் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. (இ)

### கொடும்பாவி எரிப்பு

சென்னை, ஆக. 8

நுங்கம்பாக்கத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்னுல் பிரதமர் பிரேமதாசாவின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

அகில இந்திய சிவாஜி கணேசன் ரசிகர் மன்றம் இதனைச் செய்தது.

தேனும்பேட்டை காமராஜர் திடலில் இருந்து கொடும்பாவி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைப் பிரதமர் பிரேமதாசா எதிர்ப்பதற்கு ஆட்சேபம் தெரிவித்தே இச்சம்பவம் இடம்பெற்றது.

(இ-எ)



பொய்யாமொழி

**குறள்:**

சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்.

**பொருள் :**

சுற்றத்தாரால் சுற்றப்படும்படியாக அவர்களைத் தழுவி அன்பாக வாழ்தல், ஒருவன் செல்வத்தைப் பெற்றதனுல் பெற்ற பயனுகும்.

## ஜீ. சி. ஈ. உயர்தர பரீட்சை புதிய நேரசூசி

யாழ்ப்பாணம், ஆக. 9

வன்செயல்கள் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சைகள் நாளைமுதல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நடைபெறும்.

இதற்கான நேர அட்டவணைகளை கல்வி அமைச்சு கல்வித்திணைக்களங்களுக்கு அனுப்பிவைத்துள்ளது.

புதிய நேர அட்டவணை பின்வருமாறு:-

10 ஆம் திகதி காலை 8,30-10 30 தாவரவியல் பகுதி 1, பி. ப 12-30 - 3-30 தூயகணிதம் பகுதி 2

11 ஆம் திகதி காலை 8-30 - 11-30 தாவரவியல் பகுதி 2, தமிழ் பகுதி 2 பி. ப. 12-30 - 3-30 மேலைத்தேய, கருநாடக சங்கீதம் பகுதி 1

12 ஆம் திகதி காலை 8-30 - 10-30 விலங்கியல் பகுதி 1, 8-30 - 11-30 பிரயோக கணிதம் பகுதி 1, சரித்திரம் பகுதி 2, பி ப. 12-30 - 3-30 சரித்திரம் பகுதி1

13 ஆம் திகதி காலை 8-30 - 11-30 பிரயோக கணிதம் பகுதி 2, விலங்கியல் பகுதி 2. சித்திரம் பகுதி 1, பி. ப. 1-30 - 3-30 மனைப்பொருளியல் பகுதி 2

14 ஆம் திகதி காலை 8-30 - 10-30 இரசாயனவியல் பகுதி 1, 8-30 - 11-30 பொருளியல் பகுதி 1, பி. ப. 12-30 - 4-30 பரத நாட்டியம் பகுதி 1

15 ஆம் திகதி காலை 8-30 - 11-30 இரசாயனவியல் பகுதி 2, பரதநாட்டியம் பகுதி 2, பி. ப. 12-30 - 3-30 கருநாடக மேலைத்தேய சங்கீதங்கள் பகுதி 2,

17 ஆம் திகதி காலை 8-30 - 11-30 பொருளியல் பகுதி 2

18 ஆம் திகதி பி.ப 12-30 - 3-30 இந்துசமயம் பகுதி 1, கிறிஸ்தவம் பகுதி 1, இஸ்லாம் பகுதி 1, சமஸ்கிருதம் பகுதி 1

19 ஆம் திகதி காலை 8-30 - 11-30 சித்திரம் பகுதி 2, ஆங்கிலம் பகுதி 1, பி. ப. 12-30 - 3-30 இந்துசமயம் பகுதி 2, கிறிஸ்தவம் பகுதி 2, இஸ்லாம் பகுதி 2, சமஸ்கிருதம் பகுதி 2

20 ஆம் திகதி காலை 8-30 11-30 சித்திரம் பகுதி 3, ஆங்கிலம் பகுதி 2. பி ப 1-30 - 3-30 வர்த்தகமும் நிதியும் பகுதி 1

22 ஆம் திகதி காலை 8-30 - 11-30 புவியியல் பகுதி 2. பி ப. 12-30 3-30 இந்து நாகரிகம் பகுதி 1 இஸ்லாமிய நாகரிகம் பகுதி1

24 ஆம் திகதி:- காலை 8 30-11-30 புவியியல் பகுதி 3, பி ப 12 30- 3-30 இந்து நாகரிகம் பகுதி 2, இஸ்லாமிய நாகரிகம் பகுதி 2

25 ஆம் திகதி காலை 8 30- 11 30 அரசியல் மூலதத்துவங்கள் பகுதி 1. பி. ப. 12 30 3-30 அளவை விஞ்ஞான முறை பகுதி

26 ஆம் திகதி காலை: 8.30 - 11 30 அரசியல் மூலதத்துவங்கள் பகுதி 2 பி. ப 12. 30 -3- 30 அளவை விஞ்ஞான முறை பகுதி 2

27 ஆம் திகதி பி. ப. 12-30 - 3-30 நாடகமும் அரங்கியலும் பகுதி 1

28 ஆம் திகதி காலை 8-30 - 11-30 நாடகமும் அரங்கியலும் பகுதி 2. பி ப. 1-30 - 3-30 நாடகமும் அரங்கியலும் பகுதி 3 (இ-7)

### திருமுறை பண்ணிசை போட்டி

வருடாவருடம் நடைபெறும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவத்தையொட்டி யாழ்ப்பாண மாநகரசபை நடத்தும் திருமுறைப்பண்ணிசைப் போட்டி இம்முறையும் நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்றத் தகுதியுடையோர் ரூபா. 2/-செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தை நல்லூர் கந்தசுவாமி கோவிலின் மேற்கு வீதியில் அமைந்துள்ளமாநகரசபை சுகாதார அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவித
ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
ஆர். ஜி. பில்டிங்
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

09 - 08 - 1987 ஞாயிற்றுக்கிழமை

மீண்டும் வழமையான இடத்தில்
★ ராஜ் கோபால்ஸ் ★
திருமண வைபவங்களுக்கேற்ற
பட்டுப்புடைவைகளைப் பெற்றுக்கொள்ள
★ ராஜ் கோபால்ஸ் ★
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# விட்ட பிழைகளை திருத்துவோம்

## இந்து பேட்டியில் ஜனாதிபதி

கொழும்பு, ஆக. 9

அவிழ்க்க முடியாதிருந்த முடிச்சை நான் அவிழ்க்கப்போகின்றேன். அதன் மூலம் நானும் ஏனையோரும் முன்னர்விட்ட பிழைகளை திருத்திக்கொள்வோம்.

—ஜனாதிபதி ஜெயவர்த்தனா, இந்து இணை ஆசிரியர் என். ராமுக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்தார்.

'இலங்கைத் தமிழருக்கு நீங்கள் கூறப்போவது என்ன? —இப்படி திரு. ராம் கேட்டார்.

திரு. ஜெயவர்த்தனா சொன்னார்;-

'நான்வழங்கும் செய்தி இதுதான்.

என்னை மன்னித்து விடுங்கள். அவர்களையும் நான் மன்னிக்கிறேன்—ஆயுதங்களை கீழேவைத்தவுடன்.

அரசியல் வாழ்வின் தேசிய நீரோட்டத்தில் சேர்ந்துகொள்ளுங்கள்; தெரிவுசெய்யப்பட்டு அதிகாரத்துக்கு வாருங்கள்.

ராம்: நீங்கள் விட்ட பெரும் பிழை என்ன?

ஜெயவர்த்தனா: பெரிய பிழை சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டதுதான். இது விஷயத்தில் எனது கட்சியும் ஏனைய சிங்கள அரசியல் சக்திகளும் தவறிழைத்து விட்டன.

1950 களில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கூறிய ''ஒரு மொழி-இரண்டு நாடுகள்; இரண்டு மொழிகள்—ஒரு நாடு''—என்பதில் உள்ள அர்த்தத்தை நான் நம்புகின்றேன்.

'ராம்: இவற்றையெல்லாம் முன்னர் உணர்ந்து செயல்பட்டிருந்தால் இரத்தம் சிந்தப்பட்டதைத் தவிர்த்திருக்கலாமே!

ஜெயவர்த்தனா: சிங்கள மக்களுக்கு இன்னும் பல நான் கூறவுள்ளேன்.

முன்னர் எனக்கு அறிவு போதாமல் இருந்தது; எனக்குத் துணிச்சல் இல்லாதிருந்தது எனக்கு தூரதிருஷ்டி இல்லாதிருந்தது.

—இப்படி திரு. ஜெயவர்த்தனா சொன்னார்.

(உ-எ)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஆக 9

''இந்து கலாசாரம்'' நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 7-30 மணியளவில் நல்லூர் மேற்கு வீதியிலுள்ள பிள்ளையார் கோவிலில் நடைபெறும்.

யாழ் மாநகர சபை முன்னாள் துணை முதல்வர் ஆ. துரைராஜசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பல அறிஞர்கள் உரையாற்றுவர்.

நூலாசிரியர் ஸ்ரீ தயாளன் நன்றியுரையாற்றுவார். (இ)

## ஊரடங்கு தொடர்கிறது

கொழும்பு, ஆக.9

தொடர்ந்தும் திருகோணமலை, அம்பாந்தோட்டை, பொலன்னறுவை, மொனறாகலை மாவட்டங்களில் இரவு நேர ஊரடங்குச் சட்டம் மாலை 6 மணிக்கே அமுலுக்கு வரும் என்று அரசு அறிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய மாவட்டங்களில் இரவு 10 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுலுக்குவரும். (இ - எ)

## எம். ஜி. ஆர். நியூயோர்க் வந்தடைந்தார்

நியூயோர்க், ஆக. 9

வைத்திய சிகிச்சைக்காக தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் (இலங்கை நேரப்படி) நேற்று அதிகாலை 2.30மணி அளவில் நியூயோர்க் விமான நிலையம் போய்ச் சேர்ந்தார். செல்லும் வழியில் டுபாய், லண்டன் விமான நிலையங்களில் திரு இராமச்சந்திரனை அந்த அந்த நாட்டுத் தூதர்கள் வரவேற்று உபசரித்தார்கள்.

இந்திய—இலங்கை ஒப்பந்தம் உருவாக பிரதமர் காந்திக்கு உதவி புரிந்ததற்காக அவரை அவர்கள் பாராட்டினர். (இ-எ)

## ஒப்பந்தத்தை நவசமசமாஜக் கட்சி எதிர்ப்பது ஏன்?

யாழ்ப்பாணம், ஆக. 9

'தமிழ்மக்கள்மீதுஇந்த ஒப்பந்தம் பலவந்தமாகத் திணிக்கப்பட்டிருக்கிறது. மக்களை நிர்ப்பந்திக்க இலங்கை அரசுக்கோ இந்திய அரசுக்கோ உரிமை இல்லை. எனவேதான் இந்த ஒப்பந்தத்தை நவசமசமாஜக்கட்சி எதிர்க்கிறது'.

இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தநவசமசமாஜக்கட்சியின் அரசியற்குழு உறுப்பினர் திரு. நீல் விஜய திலக்க தெரிவித்தார்.

நவசமசமாஜக் கட்சியினர் யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அதன் அரசியல் குழு உறுப்பினர் திரு. நீல் விஜய திலக்க மேற்கண்டவாறு கூறினார்.

''அரசுக்கு தமிழர் நலனில் அக்கறை இல்லை. அதனால்தான் தமிழருடன் ஒப்பந்தம் செய்வதைவிட்டு இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்திருக்கிறது. இந்த ஒப்பந்தத்துக்குப் பின்னணியில் வேறு ஏதோ நோக்கம் இருக்கிறது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வலிமையும் தென்னிலங்கை வர்க்கப் போராட்டமுமே அரசை இந்த ஒப்பந்தத்தைச் செய்யும் நிலைக்குத் தள்ளியது. இப்போராட்டங்களில் இருந்து தப்பவே அது இந்திய உதவியை நாடியது.

வடக்கு, கிழக்கு இணைப்பானது அவை தமிழருடைய பாரம்பரியப் பிரதேசம் என்பதை ஒப்புக்கொள்ளுகிறது.

ஆனால் அந்த இணைப்பு ஒரு வருடத்தின் பின் நடத்தப்படவிருக்கும் சர்வஜன வாக்கெடுப்பினால் நிராகரிக்கப்படும். அப்படி ஒரு வாக்கெடுப்பை அரசு நடத்தக் கூடாது.

கிழக்கில் வாழும் சிங்கள மக்கள் தொடர்ந்தும் அங்கேயே வாழ விரும்புகிறார்களா என்பதை அறிய அவர்களுக்கு மத்தியில் மாத்திரம் ஒருவாக்கெடுப்பை நடத்தலாம்.

இவ்வளவு காலமும் தமிழ்மக்கள் மத்தியில் அரை நிலைப்பாடான சுயாட்சியாவது இருந்தது. இந்த ஒப்பந்தம் மூலம் அதுவும்பறிபோய் விட்டது.

தமிழ்ப் போராளிகளை நிராயுதபாணிகளாக்குவதற்குப் பதிலாக அவர்களைக்கொண்டு ஒருபாதுகாப்பு இராணுவத்தை அமைத்திருக்கலாம்.

கஜபாகு, கெமுனு படைப்பிரிவுகள்போல சங்கிலியன், பண்டாரவன்னியன் என்னும் பெயர்களில் படைப்பிரிவுகளை நிறுவியிருக்கலாம்.

இவ்வாறு செய்திருந்தால் இந்திய ராணுவத்தின் பாதுகாப்பு இங்கு தேவைப்பட்டிருக்காது. இந்திய ராணுவம் வந்ததால் தமிழரின் பாதுகாப்புஉறுதிப்படவில்லை. ஜே ஆரின் பாதுகாப்பே உறுதிப்பட்டுள்ளது.

இப்படி அவர்கூறினார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் கட்சியின் செயற்குழு உறுப்பினர் திரு. வீ எஸ். மணியமும், யாழ் அமைப்பாளர் திரு. அண்ணாமலையும் கலந்துகொண்டனர்.

பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளுக்கும் நீல் விஜயதிலக்க பதிலளித்தார். (இ)

## பிரசைகள் குழுக்களின் இணைப்புக்குழு கண்டனம்

யாழ்ப்பாணம், ஆக. 9

இலங்கை – இந்திய உடன்படிக்கையை அடுத்து தமிழ்ப் போராளிகள் நிராயுதபாணிகளாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது பொதுமக்கள் மீதும் போராளிகள் மீதும் இலங்கை இராணுவமும் கடற்படையும் தாக்குதல்கள் மேற்கொண்டு வருவதை பிரசைகள் குழுக்களின் இணைப்புக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

மேற்கண்டவாறு பிரசைகள் குழுக்களின் இணைப்புச் செயலாளர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஒப்பந்த மூலம் தமிழ் மக்களின் பாதுகாப்பைப் பொறுப்பேற்றுள்ள இந்திய இராணுவம் ஸ்ரீலங்கா இராணுவத்தின் இந்த அத்துமீறல்களுக்கு எதிராக எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதை வேதனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஆகவே இந்தியா இந்த விவகாரத்தில் கடுமையான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து இடம் பெயர்ந்தவர்கள் தமது பழைய இடங்களுக்குத் திரும்பலாம் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் கடந்த புதன்கிழமை முல்லைத்தீவிலுள்ள கொக்குத்தொடுவாய்க்குத் திரும்பியதமிழ் அகதிகள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர்களை விரட்டிக் கலைத்தனர்.

குருநகரில் இருந்து தொழிலுக்குச் சென்ற மூன்று மீனவர்கள் கடற்படையினரால் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர்.

ஒப்பந்தத்துக்குப் பிறகு நிராயுதபாணிகளாக வந்த இரு போராளிகள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

திருமலையிலும் ஊர்காவற்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்து தமிழர் ஒருவர் கொல்லப்பட்டார்.

ஏற்கனவே அளித்த உறுதிமொழிக்கு ஏற்ப இந்தியா இந்த விவகாரத்தில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ)

## பஸ்விபத்தில் 90 பேர் பலி

லக்னோ, ஆக. 9

உத்தர பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பஸ் விபத்தில் 90க்கு அதிகமானோர் உயிரிழந்தனர் என்று அஞ்சப்படுகிறது.

கால்வாய் ஒன்றினுள் பஸ் புரண்டு விழுந்தபோதே உயிரிழப்புகள் ஏற்பட்டன. (இ - எ)

## மடு உற்சவம்

யாழ்ப்பாணம், ஆக. 9

பல வருடங்களின் பின் மடு தேவாலய உற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

தற்பொழுது இந்திய இராணுவத்தினர் மன்னார்ப் பகுதியில் நிலைகொண்டிருப்பதை அடுத்து மடு உற்சவத்துக்கு பல பகுதிகளில் இருந்தும் யாத்திரிகர்கள் சென்ற வண்ணம் உள்ளனர். (இ-10)

## புலிகளின் அலுவலகம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம். ஆக. 9

தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் தொடர்பு அலுவலகம் இடம் மாற்றப்பட்டுள்ளது.

இந்த அலுவலகம் இதுவரை யாழ் பல்கலைக் கழகத்துக்கு முன் இயங்கி வந்தது.

இப்பொழுது போற்பதி பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக புதிய அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் மக்கள் தங்கள் குறைபாடுகளை புதிய அலுவலகத்தில் தெரிவிக்கலாம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர் (இ-7)

## ஒப்பந்த - - -

(1- பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசும் அமைச்சரவை உபகுழு ஒன்றை நியமிக்க இருப்பதாக புதுடில்லிச் செய்திஒன்று தெரிவித்தது. (இ – எ)

## வடக்கு - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சங்கங்களின் கூட்டுக் கமிட்டி, யாழ்ப்பாண வர்த்தகர்கள் சங்கம், வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்கம், சுன்னாகம் வர்த்தகர் சங்கம், சுன்னாகம் பிரசைகள் குழு—

இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம், சுன்னாகம் ஜனசக்தி இளைஞர் கழகம், சுன்னாகம் வடக்கு சனசமூக நிலையம்—

வட பிராந்திய லொறி போக்குவரத்துச் சங்கம், ஆனைக்கோட்டை பாரதி மக்கள் சமாதான சபை, திருகோணமலை மாவட்ட புனர்வாழ்வு நிறுவனம், ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய நிர்வாக சபை, ஊரெழு கலைவாணி மாதர் அபி. சங்கம், பாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழில் விரிவாக்க சேவா சங்கம் —

குருநகர் புதிய சந்தை வர்த்தகர்கள் சங்கம், மானிப்பாய் திருவள்ளுவர் ச. ச. நிலையம், ஊரெழு சுகாதாரக்குழு, புன்னாலைக் கட்டுவன் தெற்கு மாதர் முன்னேற்றச் சங்கம், புன்னாலைக் கட்டுவன் கணேச ச ச. நிலையம், இணுவில் பொதுநூலகம் —

ஊரெழு பிரசைகள் குழு, சுன்னாகம் அம்பேத்கார் ச ச. நிலையம், ஊரெழு கிராம அபி சங்கம், மல்லாகம் சைவ வாலிபர் சங்க ச.ச. நிலையம், சுன்னாகம் ஜனசக்தி கி. அபி. சங்கம், மல்லாகம் இளைஞர் கழகம்—

சுன்னாகம் ஸ்ரீமுருகன் அபி. மகளிர் சங்கம், சுன்னாகம் கிழக்கு ச ச நிலையமும் கி அபி.சங்கமும், மற்றும் பொதுமக்கள் சார்பிலும் பல துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப் பட்டுள்ளன.

(அ-ஓ-7-10-51)

## ஆதரவு - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடத்தப்பட்டுவருகிறது.

குறிப்பாக கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் போன்ற இடங்களில் குடியேற்றங்களைப் பலப்படுத்தி வருவதுடன் தமது பழைய இடங்களுக்குத் திரும்பும் தமிழர்களை அனுமதியாத இராணுவம் அவர்களை மிகவும் கோரமாகத் தாக்கியும் வருகிறது.

இதுமட்டுமன்றி ஸ்ரீலங்கா படைகள் நிராயுதபாணிகளான தமிழர்களைக் கொன்று குவித்து வருகின்றன.

இதனை எதிர்க்கும் முகமாக இன்று இடம் பெறும் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு வழங்குவோம்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## பூஸா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தனர் என்று கொழும்பு பி பி சி செய்தியாளர் அறிவித்தார்.

அடுத்த திங்கட் கிழமை மேலும் ஆயிரம் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர் என்று அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விரைவில் தென் இலங்கையில் உள்ள தடுப்பு முகாம்கள் எல்லாம் காலியாகிவிடும் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-எ)

## கிழக்கில் - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு பிராந்தியத் தளபதி மற்றும் பிரமுகர்கள் ஆயுத ஒப்படைப்புப் பற்றித் தீர்மானிப்பர். — இப்படி பி. பி. சி. நேற்று அறிவித்தது.

இதனிடையில் திருகோணமலை மாவட்டத்தில் ஆயுதங்களை ஒப்படைப்பதற்காக மேலும் நான்கு இடங்களை அரசாங்கம் அறிவித்துள்ளது

குச்சவெளி, அனுராதபுரம் சந்தி, மூதூர், துவரங்காடு ஆகிய இடங்களே அவை. (இ எ)

## போராளி - - -

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

யையில் 'இலங்கை அரசு அமைக்கப் போவதாகக் கூறப்படும் இடைக்கால நிர்வாகம் பற்றி எமக்கோ அல்லது இந்திய மத்திய அரசுக்கோ ஒன்றுமே தெரியாது' — என்று சொன்னார். [இ-எ]

### தேவை
#### மனேச்சர்/உணவு பரிமாறுபவர்கள்

★ சைவ உணவகம் நடத்துவதிலும், வேலையாட்களைக் கொண்டு நடத்துவதிலும், பண்பான முறையில் நடந்து கொள்ளக் கூடியவரும், குடும்பப் பொறுப்புகள் அதிகளவு இல்லாத ஒருவர் மனேச்சராகத் தேவை. வேலைக்காகத் தொடர்பு கொள்ளும்போது சிபார்சுக்கடிதம் இணைத்துக்கொள்ளவும்.

★ தரமான பண்பான முறையில் உணவு பரிமாறும் சிப்பந்திகளும் தேவை. லீவுகள் எடுக்காது வேலையில் அக்கறையுள்ளவர்கள் தொடர்புகொள்ளுங்கள். சம்பளம் 750/-க்கு மேல். சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

★ திறமைக்கேற்ப சம்பளம்கூட்டப்படும்.) ★

— நேரில் தொடர்பு கொள்ளவும். —

ஞானம்ஸ் சைவ உணவகம்
கந்தசுவாமிகோவில் வீதி,
வவுனியா.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் உள்ள
### உதயன் — சஞ்சீவி
விற்பனையாளர்களுக்கு ஒரு
### நற்செய்தி

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் உதயன், சஞ்சீவி பத்திரிகைகளின் விநியோகத்தைச் சீர்செய்யும் முகமாக எமது மாநகர சபை எல்லைக்குள்ளான விநியோகத்தை 'அருண்மார்க்கட்டிங் சேவிஸர்ஸ்'ஸ்தாபனத்தாரிடம் ஒப்படைத்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம். யாழ் மாநகரசபை எல்லைகுள் உதயன் விற்பனையாளர்களாக விரும்புவோர் ஆகஸ்ட் மாதம் 7, 8, 9-ம் திகதிகளில் காலை 8-30 மணிக்கும் பிற்பகல் 3-00 மணிக்கும் இடையில் கீழ்க்கண்ட விலாசத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

முகாமையாளர்
அருண் மார்க்கட்டிங் சேவிஸர்ஸ்
15, 2 ஆம் ஒழுங்கை
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் உள்ள எமது தற்போதைய விற்பனையாளர்களும், முகவர்களும் அருண் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி
உதயன் பப்ளிகேஷன்ஸ் பிறைவேட் லிமிட்

### தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல அச்சகம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு உடனடியாக ஆட்கள் தேவை.

1. இயந்திர இயக்குனர்:
ஹைடில்பேர்க் இயந்திரம் இயக்குவதில் மூன்று வருட முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்,

2. அச்சுக்கோப்பாளர்கள்:
உரிய அனுபவம் உள்ளவர்களுக்கு முன் உரிமை அளிக்கப்படும்.

தபாற்பெட்டி இல: 100
மே/பா உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு
☆ உதயன் நடத்தும் ☆
### அதிர்ஷ்டப் பயணப் போட்டி-87

★ யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரை சொகுசுபஸ் பயணம்
★ கொழும்பு கிறீன்லன்ட்ஸ் ஹோட்டலில் ஒருநாள் ஓய்வு
★ எயர்லங்கா விமானத்தில் இருவருக்கு பழனி போய்-வரும் பயணச்சீட்டு
★ பழனியில் உயர்தர ஹோட்டலில் தங்கும் வசதி
★ பழனி முருகனை 3 நாட்கள் தங்கி வணங்கும் பாக்கியம்.
★ கைச்செலவுக்கு 50 அமெரிக்க டொலர்கள்.
● 2ஆம் 3ஆம் பரிசுகளாக தங்க மோதிரமும், காஞ்சிபுரம் பட்டுச்சேலையும்.

#### இவற்றைப் பெறப்போகும் அதிர்ஷ்டசாலிகள் யார்?

அந்த அதிர்ஷ்டசாலி நீங்களாகவே இருக்க, செய்யவேண்டியது இவ்வளவு தான்.

1. நாளை முதல் உதயன்-சஞ்சீவி பத்திரிகைகளில் வெளியாகும் 'அதிர்ஷ்டப் பயணப் போட்டி 87' கூப்பன்களை கத்தரித்து எடுக்கவேண்டும்.
2. கூப்பன்களில் உள்ள கேள்விகளுக்குப் பொருத்தமான விடைகளை அதற்கு என ஒதுக்கப்பட்ட இடத்தில் எழுத வேண்டும்.
3. உங்கள் பெயர் முகவரிகளை தகுந்த இடங்களில் நிரப்பிக் கூப்பனை நல்லூர் வீதிகளில் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலோ அல்லது தபால் மூலம். 'அதிர்ஷ்டப் பயணப் போட்டி 87'' உதயன் பணிமனை, 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அனுப்பி வைக்கவேண்டும்.
4. உதயன் ஸ்தாபனத்தில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்கள்குடும்பத்தினரும் இந்த போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ... யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 09-08-1987
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. at 292/2 Navalar Road, Jaffna on Sunday August 09, 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org